
பல தெய்வ நாமங்கள் செயல்கள்
பயின்று வரும் ஒன்று முதல் ஏழாம்
திருமுறை வரையுள்ள

# தேவாரப் பாடல்களின் தொகுப்பு




தொகுப்பாசிரியர் :

காரையூர் பொன் கோபால்


திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரர்
மாணிக்கவாசகர்

# பல தெய்வ நாமங்கள் செயல்கள் பயின்று வரும் ஒன்று முதல் ஏழாம் திருமுறை வரையுள்ள தேவாரப்பாடல்களின் தொகுப்பு



தொகுப்பாசிரியர் : காரையூர் பொன்கோபால்

# பொருளடக்கம்

1. கணபதி நாமம் பயின்று வரும் பாடல்கள்
2. கந்தன் நாமம் பயின்று வரும் பாடல்கள்
3. வீரபத்திரர் நாமம் பயின்று வரும் பாடல்கள்
4. வைரவர் நாமம் பயின்று வரும் பாடல்கள்
5. சந்திரசேகரர் நாமம் பயின்று வரும் பாடல்கள்
6. வேட நாமம் பயின்று வரும் பாடல்கள்
7. பிட்ஷாடனர் நாமம் பயின்று வரும் பாடல்கள்
8. தெட்ஷணாமூர்த்தி நாமம் பயின்று வரும் பாடல்கள்
9. திரிபுரதகனம் பயின்று வரும் பாடல்கள்
10. திருநீலகண்ட(ர்)ம் நாமம் பயின்று வரும் பாடல்கள்
11. சிவனிரவு பயின்று வரும் பாடல்கள்
12. லிங்கோற்பவம் நாமம் பயின்று வரும் பாடல்கள்
13. காளி அம்பாள் நாமம் பயின்று வரும் பாடல்கள்
14. அபிஷேகம் பயின்று வரும் பாடல்கள்
15. திருக்கல்யாணம் என்பன பயின்று வரும் பாடல்கள்
கூஉ நாமங்கள் - செயல்கள் பாடலில் பயின்று வருகின்றன.

# முகவுரை

மெய்யடியார்களாகிய நாமனைவரும் இந்து மதத்தவர்களே. இந்து மதத்தில் ஆறு சமயங்கள் உண்டு. அவையாவன, சைவம், சாக்தம், வைஸ்ணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என்பதாம். இவைகளில், சைவசமயம் சிவபெருமானையும், சாக்த சமயம் அம்பிகையையும், வைஸ்ணவ சமயம் விஸ்ணுவையும், காணாபத்ய சமயம் கணபதியையும், கௌமார சமயம் முருகக் கடவுளையும், சௌரம் சூரிய பகவானையும் வழிபடுகின்றவர் களுக்கான சமயங்களாகும். மேற்குறிப்பிட்ட தெய்வங்களில் ஒவ்வொன்றையும், தங்கள் தங்கள் உபாசனா மூர்த்தியாகக் கொண்டு வழிபடுபவர்கள். அவ்வத்தெய்வங்களையே பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்வர், ஆயினும் சகல ஆலயங்களிற்கும் சென்று வழிபடுவார்கள் இதை "சமரசபக்தி" என்று சொல்வது. அன்பே சிவம்.

இந்து மதம் "எம்மதமும் சம்மதமே" என்று பேசுகிறது. அதனாலன்றோ "அறுவகை நெறிகளும் பிறவும் ஆகிய இறைவிதன் இணையடி இறைஞ்சியேத்துவாம் என்று புராணங்கூறுகின்றது. ஆறெலாம் ஓடி கடலை அடைவது போல, அறுசமய வழிபாட்டின் பயன் எலாம் அவ்வத் தெய்வங்கள் மூலம் முழுமுதற் கடவுளாகிய சிவ பரம்பொருளையே அடைகின்றன. மூலமும் முடிவும் இல்லாதவராகிய உமாபரமேஸ்வரமூர்த்தியை யாம் வழிபட்டு உய்தியடைவதற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்கள் உள்ளன. இம் மார்க்கங்களில் நம்மவர்களால் கைக்கொள்ளக் கூடியது சரியை மார்க்கமே. கிரியை மார்க்கம் அந்தணப் பெருமக்களால் இயற்றப் பெறுவது. ஏனைய இரு மார்க்கங்களும் யோகிகளானவர்களும் அதிலிருந்து உயர்வு பெற்ற ஞானவான்களுக்குமே உகந்த உரிய வழிகளாம்.

ஆகவே மனிதர்களாகிய யாம் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு சரியை வழியில் பல தொண்டுகள் உண்டு. அவையாவன, திருவின் ஆலயத்தைக் கூட்டுதல், மெழுக்கிடுதல், நந்தவனம் வைத்தல்,

பூப்பறித்து மாலை கட்டுதல், பூசைக் காலத்தில் சன்னிதானத்தில் ஒப்புவித்தல், ஆலயம் சூழ வலம் வருதல், திருமுறைப் பாடல்களை ஓதுதல், சங்குநாதம் செய்தல், இறைவனைத் தாங்குதல், இன்னோரன்ன பல சிவ கருமங்களை ஆற்றுதல் இறையருள் கிட்டும் வழியாகும்.

மேற்கூறப்பட்ட இறைபணி காரியங்களில் பரம்பொருளை பாடலாற் பரவுவது(ம்) சரியை வழிபாடேயாம். ஓர் சிறப்பானதும் உன்னதமானதுமான தொண்டாம். எவ்வாறெனில்? சிவபெருமான் உமையம்மையோடு சீர்காளிகோபுரத்தில் "தோன்றி தோடுடைய செவியன்....." எனுந்திருப்பாடலை 3ம் வயதிலே பாடவைத்தார், ஞானசம்பந்தபிள்ளை இத்தேவாரப் பாடலில் அன்னை தோடு (அன்னை பாகத்தையே முன்னிலைப்படுத்தி)ப் பாடியுள்ளார், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய பாடல்களின் தொகை 4169 என அறிக. ஆகவே பாலூட்டிப் பாடவைத்தார். பார்பதீ சமேத பரமசிவன் ஞானசம்பந்த மூர்த்திநாயனாரை என்பது இத்தால் அறிகின்றோம். சம்பந்தர் பாடல்களை ஆதியில் (திருகடைக்காப்பு) என்றே அழைத்தார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகளை சூலை கொடுத்து தமக்கையார் திருவைந்தெழுத்தை ஓதித் திருநீறு இட்டதும் திருவதிகை வீரட்டானத்து சிவனார் முன் "கூற்றா இனவாறு விலக்கலீர்...." திருவதிகை வீரட்டானரின் திருவருள் துணை கூட, அப் பதிகப் பாடல்கள் யாவும் நிறைவுற்றன. நோயும் நீங்கியது. திருநாவுக்கரசர் என்கின்ற நாமத்தால் சிவம் அவரை அழைத்து மேலுந் திருவருள் கூட்டினார். திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய பாடல்கள் 49000 ஆகும். அவற்றில் செல் அரித்தவை நீங்கலாக 312 பதிகங்களும் 3066 பாடல்களும் தற்போது உண்டு. நாவுக்கரசர் பாடிய பாடல்களை ஆதியில் (தேவாரம்) என்று அழைத்தனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆவணங் காட்டி ஆட் கொண்டார். பித்தா, என்று பேசினை அவ்வாறே பாடுவாயென அடிகொடுத்துப் பாடவைத்தார். மேல்வருமாறு சுந்தரக்குக் கூறுகிறார் சிவபெருமான்.

பாடல்: மற்றுநீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம்
பெற்றனை, நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
"நற்றமிழ் பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு! என்றார் தூமறை பாடும் வாயார்-

சே.பெ.புரா.

அரனார் கூறியவாறே சுந்தரமூர்த்தி நாயனர் 1026 பாடல்களைப் பாடி அருளினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடல்களை முற்காலத்தில் "திருப்பாட்டு" என்று அழைத்தனர்.

(01) திரு + முறை : கடவுளிடம் (பாக்களால்) முறையீடு செய்தல் என்பதாம்.

(02) தேவாரம்:-தேவ + ஆரம். தேவன் - சிவன், ஆரம் - மாலை சிவபெருமானுக்கு, திருமுறைப் பாடல்களால் மாலை சூட்டுதலாம்.

(03) தேவாரம்:- சிவபரம்பொருளிடத்து, தேவாரப் பாடல்களைப் பாடி அன்பு செய்வதாம்.

## திருமுறைப் பாசுரங்களை ஓதுபவர்கள் மனதிற் கொள்ள வேண்டியவைகள்

பாடல்களை ஓதத் தொடங்கும் போது மனதில் கணபதியை நினைந்து சிறிது உரத்த தொனியில் "திருச்சிற்றம்பம்" எனும் நாமத்தை உச்சரித்து, சொற்பிழை - பொருட் பிழையின்றியும், பதங்களைச் சரியாகப் பிரித்தும், பாடல்கள் அமைந்த பண்களில் இடமறிந்து, பக்திபூர்வமாக ஓதுதல் வேண்டும். திருமுறைகளைப் பாடுபவர்கள் சமய ஆசார அனுஸ்டானங்களைக் கடைப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் மாமிசம் விலக்கி, சமயதீட்சை பெற்றவராயேனும் இருத்தல் நன்று. பாமர மக்களாகிய நாம் எல்லோரும் இசை பயின்றவர்கள் அல்லர். ஓதுவார்களின் இசைவித்துவான்களின் திருமுறை நிகழ்வுகளைக் கேட்டும், நேரில் பார்த்தும் (அவர்கள் இன்ன பண், இராகத்தில் ஓதப் பெறுகிறது எனத் தெரிவித்து விட்டே பாடல்களை

ஓதுவார்கள்) அவற்றை மனதில் நிறுத்தி, மனனஞ் செய்து பாடலாம், பாடமுடியும். சிறியேன் கூட இசைபயின்றவனல்லன். மேற்கூறியவாறு ஓதுவார்கள் பாடும்போது கிரகித்து மனதில் பதித்து மனனம் பண்ணியே திருமுறைப்பாடல்களை பாடுகின்றேன் என்பதைத் தெரியத்தருகின்றேன். யான் திருமுறை ஓதுவதில் வல்லவனல்லேன். ஆயினும்...

தேவாரத் திருமுறைப் பாடல்களை ஓதும்போது இன்று என்ன நாள்? என்ன விழா? எந்த இறை சன்னிதியில் ஓதுகின்றோம்? என்பதை உணர்ந்து ஓதுதல் வேண்டும். அவ்வக் காலத்தில் ஓதக்கூடிய திருமுறைகளை அருளாளர்கள் தந்துள்ளார்கள். அசர் அவைக்கான மூவர் தேவாரப் பாடல்களிலிருந்து தொகுத்து, அந்த அந்தத் தலைப்புகளில் தந்துள்ளேன். யாவரும் உணர்ந்து ஓதி இறையருள் பெறுவீர்களாக. தேவாரமுதலிகள் மூவரும், சிவபெருமானின், அவரால் இயற்றப்பட்ட லீலைகளை ஒவ்வோர் பாடல்களாலும், பற்பல செயல்கள் அமைய பக்திப் பரவசம் பெருக, உள்ளமானது உருகி, உருகிக் கண்ணீர்வாரப் பாடியும், அப்பனுவல்களை பாடும் அடியார்கள் "துன்ப துயரங்கள் அகன்றும் பரமனடி சேர்வார்களென்றும்," ஒவ்வோர் பதிகத்தின் நிறைவுப்பாடலிலும் குறித்துள்ளார்கள். அவை மாத்திரமல்லாது, "பண்ணோடிசை (ப்)பாடல் மறந்தறியேன்", எனவும் "தமிழோடிசை(ப்) பாடல் மறந்தறியேன்" மேலும் இசையையுந், தமிழையும் இணைத்துப் பாடியுள்ளார்கள், ஆக இசையின் சிறப்பும், தமிழின் சிறப்பையும் அறிந்து ஓதி மகிழ்வோம்.

திருமுறைகள் யாவும் ஆலயங்களிலும், வேறு புனிதமான இடங்களிலும், பூஜை அறையிலும், ஓதுபவர் புனிதமாகி ஓதுதல் வேண்டும். (சிறியேன் க்ஷ நூலில் குறித்துள்ள தேவாரப் பாடல்களாவன, ஓதுவார்களால் இடமறிந்து ஓதக்கூடியவையே என்பதைத் தாழ்மையுடன் தெரியத்தருகின்றேன்.

தொகுப்பாசிரியர்:- ஓதுவார் - சிவசமய சீரியர் - சிவானந்தவாரி - கலைஞானசுரபி - புராண வித்தகர் - சைவ சித்தாந்தவாரிதி-சிவகாமியின் செல்வன் காரையூர்:- பொன் கோபால் ***24-05-2016.***

நூல் வெளியீடு அனுசரணை:-

சுஜீவா வைத்தியசாலை டாக்டர் ஜெயலன் அவர்கள்
இல. 06, கலட்டி அம்மன் வீதி, யாழப்பாணம்.

வெளியீடு :- இல. 15, காரைநகர் சிவகாமி அம்பிகை சமேத ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்.

# கணபதி நாமம் பயின்று வரும் தேவாரப்பாடல்கள்

## திருச்சிற்றம்பலம்

**1ம் திருமுறை : பண் - வியாழக் குறிஞ்சி**

நெருப்புறு வெள்விடை மேனியர்
ஏறுவர் நெற்றியின்கண்
"மருப்புறு வன்கண்ணர் தாதையைக்
காட்டுவர்" மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை
யார்விளன் மாதரவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற
வத்தணி புண்ணியரே:- சம்பந்தசுவாமிகள்

*அ. பவிள: - யானையின் கொம்புபோன்ற விநாயகரின்தந்தை கூஷ திருப்பாடலில் "கந்தநாமமும் பயின்று வருகிறது"*

**1ம் திருமுறை**

காரிருள் உருவ மால்வரை புரையக்
"களிற்றினது உருவுகொண்டு"அரிவைமேலோடி
நீருறு மகளை நிமிர்சடைத்தாங்கி
நீறணிந்து ஏறுகந்து ஏறிய நிமலர்
பேரருளாளர் பிறவியில் சேரார்
பிணியிலர் கேடிலர் பேய்க்கணம்சூழ
ஆரிருள்மாலை ஆடுமெம் மடிகள்
அச்சிறுப் பாக்கம தாட்சி கொண்டாரே.

**1ம் திருமுறை: பண் - வியாழக் குறிஞ்சி**

சந்தநன் மலரணி தாழ்சடையன்
"தந்த மதத்தவன்" தாதையோதான்
அந்தமில் பாடலோன் அழகன்நல்ல
எந்தவன் இராமன தீச்சரமே.

**6ம் திருமுறை - திருத் தாண்டகம்**

கோவாய இந்திரனுள்ளிட்டா ராகக்
"குமரனும் விக்ன விநாய கன்னும்"
பூவாய பீடத்து மேல யன்னும்
பூமியளாந் தானும் போற்றிசைப்ப
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தானும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண்டார்க்கப்
புறம்பயம் நம்மூரென்று போயினரே:- அரசர்

*குறிப்பு : க்ஷ திருத்தாண்டகத்தில் "கணபதி, கந்த நாமாம்கள் பயின்றுள்ளது.*

**திருமுறை 06 திருத்தாண்டகம்**

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராய் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய் பரந்த தொகுதி கண்டேன்
"மெல்லியலும் விநாயகனும்" தோன்றக் கண்டேன்
மருந்தாய் பிணிதீர்க்கு மாறுங் கண்டேன்
வாய்மூரடிகளை நான் கண்ட வாறே-அரசர்

*க்ஷ. தி. தாண்டகப்பாடலில் "கணபதி, உமை" பயின்று வருகிறது.*

**2ம் திருமுறை - பண் : பியந்தைக் காந்தாரம்**

"கரியின் மாமுக முடைய" தாதை பல் பூதம்
திரிய இல்பலிக்கு ஏகும் செழுஞ்சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கை நல்மாதர் சதிபாட மாநடம் ஆடி
உரிய நாமங்க ளேத்தும் ஒலிபுனல் காழிநன் நகரே
- சு.சுவாமிகள்

**6ம் திருமுறை - திருத்தாண்டகம் - அரசர்**

முந்தைகாண் மூவரிலும் முதலானன் காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் "முருக வேட்குத்
தந்தைகாண் "தண்கடமா முகத்தி" னாற்குத்
தாதைகாண்" தாழ்ந்தடியே வணங்கு வார்க்குத்

சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவனென் எண்ணத் தானே.

*க்ஷ. தாண்டகத்தில் கணபதி, கந்த நாமங்கள் பயின்றுளது*

**7ம் திருமுறை - பண் : கொல்லிக் கௌவாணம் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்**

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எண்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்திர் எனக்கொருகால் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிழிர் மணிவைர க்கோவை
அவைபூணத் தந்தருளி மெய்கினிதா நாறும்
கஸ்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல் நாகைக் காரோணம் மேவியி ருந்தீரே.

**1ம் திருமுறை - பண் : வியாழக் குறிஞ்சி**

பிடியத னுருவுமை கொளமிகு "கரியது.
வடிகொடு" தனதடி வழிபடுமவரிடர்
கடிகணபதி வர"அருளி னன்மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

**7ம் திருமுறை - பண் : கொல்லிக்கௌவாணம்**

மண்ணுலகும் விண்ணுலகும் உமதே யாட்சி
மலையரையன் பொற்பாவை "சிறுவனையுந் தேறேன்
எண்ணிலி லுன்பெருவயிறன் கணபதி" யொன் றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்யீர்
திண்ணெனவென் உடல்விருத்தி தாரீரே யாகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல்நானகக் காரோணம் மேவியிருந்ருதீரே.

*அரும்பதம் :- கண்ணறையன் - குருடன், கொடும்பாடன் - கொடுமை செய்வேன்.*

**1ம் திருமுறை - பண் - வியாழக்குறிஞ்சி**

நெருப்புறு வெள்விடை மேனியர்
ஏறுவர் நெற்றியின்கண்
"மருப்புறு வன்கண்ணர் தாதையைக்
காட்டுவர் மாமுருகன்"
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை
யார்விறன் மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற
வத்தணி புண்ணியரே.

*கந்தநாமம் க்ஷ பண் கணபதி, கந்த நாமங்கள் பயின்று வருகிறது.*

**3ம் திருமுறை - பண் : சாதாரீ**

பகலொளிசெய் நகமணியை முகைமலரை
நிகழ்சரன அகவு "முனிவர்க்கு
அகலமலி சகலகலை மிகவுரைசெய்
முகமுடைய" பகவ னிடமாம்
"பகைகளையும் வகையிலறு முகஇறையை
மிகவருள" நிகரிலி மையோர்
புகவுலகு புகழஎழில் திகழநிகழ்
அலர்பெருகு புகலிநகரே. (முருக.நாமங்க. . .)

**2ம் திருமுறை - பண் : காந்தாரம்**

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம்
புகலிவொங் குருமேற் சோலை
வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய்
சிரபுரம்வண் புறவமண்மேல்
களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயம்
கொச்சைகழு மலமென் றின்ன
"இளங்குமரன்" றனைபெற் றமையவர்தம்
பகையெரி வித்த இறைவ னூரே.

**3ம் திருமுறை - பண் : கொல்லி**

ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர்தரும் "குமரவேள் தாதை" யூர்
ஆறினார் பொய்யகத் தையுணர்வு எய்திமெய்
தேறினார் வழிபடும் தென்குடித் திட்டையே.

**2ம் திருமுறை - பண் : பியந்தைக்காந்தாரம்**

குடமயில் அன்னசாயல் மடமங்கை தன்கை
எதிர்நாணி பூண வரையில்
கடுமயில் அம்புகோத்து எயில்செற்றுகந்து
அமரர்க்கு அளித்த தலைவன்
"மடமயில் ஊர்தி தாதை" எனனின்று தொண்டர்
மனனின்ற மைந்தன் மருவும்
நடமயில் ஆலநீடு குயில்கூவு சோலை.
நறையூரில் நம்பன் அவனே.

*ஃ பதிகத்தில் தி.பு.த. பயின்று வருகிறது*

**2ம் திருமறை - பண் : காந்தாரம்**

காயச் செல்வி காமற்காய்ந்து கங்கையைப்
பாயப்படர்புன் சடையிற்பதித்த பரமேட்டி
மாயச்சூரன் றறுத்தமைந்தன் தானத்தன்
மீயச்சூரைத் தொழுது வினையை வீட்டுவமே.

**1ம் திருமுறை - பண் : வியாழக்குறிஞ்சி**

"தழைமயில் ஏறவன் தாதை" யோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது இலங்கிய கோலமார்பின்
இழையவன் இராமன தீச்சரமே.

**2ம் திருமுறை - பண் : சாந்தராம்**

"வள்ளி முலைதோய் குமரன் தாதை" வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீர் அரிசில் தென்பால் சிறைவண்டும்
புள்ளு மலிபூம் பொய்கை சூழ்ந்த புகலூரே.

### 3ம் திருமுறை - பண் : பழம்பஞ்சுரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் சாய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றமறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
"பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை உகந்தனையே.

### 6ம் திருமுறை - திருத்தாண்டகம்

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசேர் ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் "நஞ்செந்தி மேய
வள்ளிம, ணளர்க்குத்" தாதை கண்டாய்
மறைக்காட்டுறையும் மணளன் தானே.

### குறுந்தொகை

அடும்புங் கொன்றையும் வன்னியும் மத்தமும்
துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான்
"கடம்பன் தாதை" கருதுங் காட்டுப்பள்ளி
உடம்பினர்கு ஓர் உறு துணையாகுமே.

### திருநேரிசை

"குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள்" தாதை என்றும்
நறவிள நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத்தானைப்
பிறவியை மாற்று வானைப்
பெருவேளூர் பேணினானை
உறவினால் வல்லனாக்கி
உணருமாறு உணர்த்து வேனே.

**திருத்தாண்டகம்**

"காரிலங்கு திருவுருவத் தவற்கும் மற்றைக்
கமலத்தின் காரணாக்குங் காட்சி யொண்ணா
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார்"போலும்
"சிலைவளைவித் தவுணர்புரஞ் செற்றார்" போலும்,
பாரிலங்கு புனலனல்கால் பரமாகா சம்
பரிதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலும்
கூரிலங்கு "வேற்குமரன் தாதை"போலும்
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனரே.

கூடி திருத்தாண்டகற்தில் "சிவரா-தி.பு.த. கந்தநாமம் பயின்று வருகிறது

**4ம் திருமுறை - தனித்திருநேரிசை**

உடம் பெனும் மனைய கத்து
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி
உயிரெனும் திரி மயக்கி
இடம்படும் ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
"கடம்பமர் காளை" தாதை
கழலடி காண லாமே.

**4ம் திருமுறை - திருநேரிசை**

மாலன மாயன் றன்னை
மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுப தியார்
பால்வெள்ளை நீறு பூசிக்
காலனை க்காலாற் செற்றார்
காஞ்சிமா நகர்தன் னுன்னார்
ஏலநற் "கடம்பன்" தந்தை
இலங்கு மேற் றளிய னரே.

**4ம் திமுறை - திருநேரிசை**

செல்வியைப் பாகம் வைத்தார்
"சேந்தனை மகனாக்" கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையிலாத
காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
எல்லியை விளங்க நின்றார்
இலங்கு மேற்ற னியனாரே.

*இஷ் பாடலில் சோமஸ்கந்த மூர்தம்பயின்று வருகிறது.*

**4ம் திருமுறை - திருநேரிசை**

மாலான மாயன் றன்னை
மகிழ்ந்த னர்விருத்தராகும்
பாலனார் பசுப தியார்
பால் வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
"ஏலநற் கடம்பன்" தாதை
இலங்குமேற் றளிய னரே.

## 07ம் திருமுறை - சுந்தரமூர்த்திசுவாமிகள் கந்த நாமம் பயின்றுவரும் பாடல்கள்

**பண் - தக்கேசி**

ஆத்தம் என்றெனை ஆளுகந் தானை
அமரர் நாதனைக் "குமரனைப் பயந்த"
வார்த்த யங்கிய முலைமட மானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்தனைச் சிவனை செழுந் தேனைத்
தில்லையம்பலத் துள்நிறை ந்தாடும்
கூத்தனைக் குருமாமணிதன்னைக்
கோலக் காவினில் கண்டுகொண்டேனே.

**7ம் திருமுறை - பண் : தக்கேசி**

ஓட்டி யாட்கொண்டு போய்ஓளி த்திட்ட
உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிருள் தன்னை
பாவிப்பார் மனத் தூறும த்தேனை
கட்டி யைக்கரும் பின்தெளி தன்னைக்
காதலாற் "கடற் சூர்தடி ந்திட்ட
செட்டி" யப்பனைப் பட்டனைச் செல்வ
ஆருரானை மறக்கலு மாமே.

**திருமுறை 07 - பண் : நட்டராகம்**

"குறவனார் தம்மகள் தம்மக னார்மண வாட்டி" கொல்லை
மறவனா ராயங்கோர் பன்றிப்பின் போவது மாயங்கண்டீர்
இறைவனார் ஆதியார் சோதிய ராயங்கோர் சோர்வுபடா
அறவனா ராவது அறிங்தோமேல் நாமிவர்க் காட்படோமே

*சுஷ திருமறை சிவனர் வேடடிவமானமைம் பயின்றுன்ன*

**7ம் திருமுறை - பண் : கொல்லிக்கௌவாணம்**

"சேந்தர்தாய்" மலைமங்கை திருநிறமும் பரிவும்
உடையானை அதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தல்தாழ் புனல்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையில் கயிலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மாமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி
ஏந்துநீர் எறிகெடில வடவீரட் டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.

**7ம் திருமுறை - பண் : இந்தனம்**

திங்கள் தாங்கு சடைக்கண் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய் திறவாள்
"கணபதியேல் வயிறு தாரி"

"அங்கை வேலோன் குமரன் பிள்ளை"
தேவியார் கொல் தட்டி யாளர்
உங்களுக்காட் செய்ய மாட்டோம்
ஒண காந்தன் தளியு ளீரே.

### 7ம் திருமுறை - பண் : தக்கேசி

திங்கள் நம்பிமுடி மேலடி யார்பால்
சிறந்த நம்பிபி றந்த உயிர்க்குலகெலாம்
அங்கண் நம்பியருள் மால்விசு ம்பாளும்
அமரர் நம்பிகும ரன்முதல் தேவர்"
தங்கள் நம்பிதவத் துக்கொரு நம்பி
தாதை யென்றுன் சரண்பணி ந்தேத்தும்
தங்கள் நம்பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பு மெங்கள் நம்பி கண்டாயே.

### 7ம் திருமுறை - பண் : தக்கேசி

திருத்தினை நகருறை "சேந்தன்" அப்பனென்
செய்வினை அறுத்திடும் செம்பொனை அம்பொன்
ஒருத்தனை யல்லதிங் காரையு முணரேன்
உணர்வுபெற் றேனுய்யுங் காரணங் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்தெங்குங் காணமாட் டாதுவிட் டிருந் தேன்
கருத்தனை நிருத்தம் செய் காலனை வேலைக்
கழுமல வளநகர் கண்டுகொண் டேனே.

### 7ம் திருமுறை - காந்தாரம்

நமர்பிறர் என்பது அறியேன்
நான்கண்ட தேகண்டு வாழ்வேன்
தமரம் பெரிதும் உகப்பன்.
தக்கவாறு ஒன்றும் இலாதேன்
"குமரன்" திருமால் பிரமன்
கூடிய தேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர்.

**7ம் திருமுறை - பண் : தக்கராகம்**

பெரும்பலம துடையசுரன் "தாரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினை" முன் படைத்துகந்த புனிதன்
கரும்புலியின் மலர்வாளிக் காமனுடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதுமூர் வினவில்
இரும்புனல் வெண் திரைபெருக ஏலமில வங்கம்
இருகரையும் பொருதலைக்கும் அரிசிலின் தென்கரைமேல்
கரும்புனை வெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டும் கடிபொழில் சூழ்கலையநல்லூர் காணே.

**7ம் திருமுறை - பண் : கொல்லிக்கௌவாணம்**

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலையரையன் பொற்பாவை "சிறுவனயுந் தேறேன்"
எண்ணிலிலுன் "பெருவயிறன்" கணபதியொன் றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்யீர்
திண்ணெனவென் உடல்விருத்தி தாரீரே யாகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நானிக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

**7ம் திருமுறை - பண் : தக்கேகி**

மறவனை யன்று "பன்றிப்பின் சென்ற
மாயனை" நால்வர்க்கு "ஆலின்கீழ் உரைத்த
அமரனை" அமரர்க் கரி யானை
"அமரர் சேனைக்கு நாயகனானை"
"குறவர் மங்கைதன் கேள்வனை ப்பெற்ற
கோனை" நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவி ரியும்நள் ளாற்றானை அமுதை
நாயினேன் மறந்தெ ன்நினைக்கேனே.

க்ஷ பாடலில், வேட, தெட்க்ஷனமூர்த்த, கந்த நாமங்கள் பயின்று வருகின்றன.

**7ம் திருமுறை - பண் : தக்கேசி**

வேந்தராய் உலகாண்டு அறம்புரிந்து
வீற்றிருந்த இவ்வு டலிது தன்னை
தேய்து இறந்துவெந் துயர் உழந் திடுமிப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்தள ங்கையில் ஆட்டுகந் தானை
பரம னைக்கடற் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருள்
சிவக் கொழுந்தினை சென்றடை மனனே.

*கூ பாடல் கந்த, கடைநாள் பயின்று வருகிறது.*
*தக்கயாக சங்கரம் வீரபத்திசுவாமி நாம் பயின்று வருகின்றது.*

## சம்மந்தர் – பகுதி 01
## வீரபத்திர சுவாமி நாமம் பயின்றுவரும் பாடல்கள்

**1ம் திருமுறை - பண் : வியாழக்குறிஞ்சி**

உரித்தது பாம்பை உடன்மிசை
இட்டதோர் ஓண்களிற்றை
எரித்ததொர் ஆமையை இன்புற
பூண்டது முப்புரத்தைச்
“செருத்தது சூலத்தை யேந்திற்றுத்
தக்கனை வேள்வி” பன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு
வில்வீற் றிருந்தவரே.

*கூ திருமுறையில்?தி.பு.தக்கன்யாகமும் பயின்று வருகிறது*

ஏழும் மூன்றுமொர் தலைகள்
உடையவன் இடர்ப்பட அடர்த்து
“வேழ்வி செற்றதும்” விரும்மி
விருப்பவர் பலபல உடையார்
கேழல் வெண்பிறை அன்ன
“கெழுமணி மிடறு”நின் றிலங்க
வாழி சாந்தமும் உடையார்
வாழ்கொளி புத்தூர் உளாரே.

*கூ திருமுறையில் ? வீரபத்திரன், பிரதோஷம் பயின்று வருகின்றது.*

**1ம் திருமுறை - பண் : தக்கேசி**

"தக்கனது பெருவேழ்வி சந்திரனிந்
திரன், எச்சின், அருக்கன ங்கி
மிக்கவிதா தாவினெடும் விதிவழியே
தண்டித்த விமலர்"கோயில்
கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமுகு
உயர் தெங்கின் இவைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுவரா
நீள்வயல் சூழ்முது குன்றமே.

**3ம் திருமுறை - பண் : பழம்பஞ்சுரம்**

சக்கரம் வேண்டுமால் பிரமன் காண
மிக்கவர் கயிலை மயேந்தி ரமும்
"தக்கனைத் தலையரி தழல் உருவர்
அக்கணி யவரா ரூர்ரானை க்காவே.

**1ம் திருமுறை: பண்:- தக்கேசி**

வெந்தலாய "வேந்தன் வேழ்வி
வேரறச் சாடி" விண்ணோர்
வந்துவா முன் பேணநின்ற
மைந்தன் மகிழ்த இடம்
மருதலாய மல்லி கையும்
புன்னை வளர் குரவின்
பந்தலா ரும்பட் டினத்தும்
பல்வ வனீச் சரமே.

**1ம் திருமுறை - பண் : நட்டபாடை**

முத்தியர் மூப்பிலர் ஆப்பின் உள்ளார்
முக்கண்ணர் "தக்கன் வேழ்வி சாடும்
அத்தியர்" என்றென்று அடியர் ஏத்தும்
ஐயன் அணங்கொடு இருந்த ஊராம்
தொத்து இயலும் பொழில்மா டுவண்டு
துதைந்து எங்கும் தூமதுப்பா யக்கோயில்
பத்திமை ப்பாடல் அறாத ஆவூர்ப்
பசுபதீச் சரம் பாடு நாவே.

# சம்பந்தர் தொகுதி 01
# வைரவசுவாமி நாமம் பயின்றுவரும் தேவாரங்கள்

### 1ம் திருமுறை - பண் : குறிஞ்சி

அறையார்கழல் "அந்தன்தனை
அயில்மூவிலை அழகார்
கறையார் நெடுவேலின் மிசை
ஏற்றானிடங் கருதின்
முறையாயின பலசொல்லி யொண்
மலர்சாந்தவை கொண்டு
முறையால்மிகு முனிவர்தொழு
முதுகுன் றடைவோடுமே.

*குறிப்பு: - வைரக்கடவுளாய் அந்தாகாசூரனை அழித்த சோலம்*

### 3ம் திருமுறை - பண் : கொல்லி

இயலுமா றெனக்கியம்பு மின்னிறை
வன்னுமாய் நிறை செய்கையைக்
கயல்நெடுங் கண்ணினார்கள் தம்பொலி
கண்டியூ ருறைவீ ரட்டன்
புயல்பொ ழிந்திழி வானுளோகளுக்
"அறையுயன் பொய் சிரம்
அயல்ந கவ்வது அரிந்து" மற்றதில்
ஊணுகந்த அருத்தியே.

### 2ம் திருமுறை - பண் : பியந்தைக் காந்தாரம்

ஏழும் மூன்றுமொர் தலைகள்
உடையவன் இடர்பட அடர்த்து
"வேழ்வி செற்றதும்" விரும்பி
விருப்பவர் பலபல உடையார்
கேழல் வெண்பிறை அன்ன
"கெழுமணி மிடறு"நின்றிலங்க
வாழி சாந்தமு முடையார்
வாழ் கொளி புத்தூர் உளாரே.

*க்ஷ பாடல்? வைரவசுவாமி: பிதோசம் பயின்று வருகிறது.*

### 1ம் திருமுறை — பண் - வியாழக்குறிஞ்சி

கற்றைச் சடையது கங்கணம்
முன்கையில் திங்கள் கங்கை
பற்றித்து முப்புரம் "பார்படைத்
தோன்தலை சுட்டது" பண்டு
எற்றித்துப் பாம்பை அணிந்தது
கூற்றை எழில் விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணு
புரத்தெ ங்கள் வேதியரே.

### 3ம் திருமுறை - பண் : சாதாரி

நச்சரவு கச்சென அசைச்சுமதி
"உச்சியின்மி லைச் சொரு கையான்
மெய்ச்சிரம் அணைச்சு" "லகில் நிச்சமிடு
பிசிசை யமர் பிச்ச"னி டமாம்
மச்சமத நச்சிமதம் அச்சி றுமி
யைச்செய்தவ அச்ச விரதக்
கொச்சைமுர வச்சர்பணி யச்சுரர்கள்
நச்சிமிடை கொச்சை நகரே.

### 1ம் திருமுறை - பண் : குறிஞ்சி

மலைமல்கு தோளன் வலிகெடவூன்றி" மலரோன்றன்
தலைகலனாகப்" பலிதிரிந்து உண்பர் பழிஓரார்
சொல்லவலவேதம் சொல்லவகீதம் சொல்லுங் கால்
சிலவலபோலும் சிராம்ப ள்ளிச்சேடர் செய்கையே.

### 3ம் திருமுறை - பண் : பழம் பஞ்சுரம்

வெண்ணிலவும் சடைசே ரவைத்து
விளங்குந் "தலையேந்திப்"
பெண்ணி லமர்ந் தொரு கூறதாய
பெருமான் அருளார்ந்த
அண்ணல் மன்னியுறை கோயிலாகும்
அணிநாரையூ ர்தன்னை
நண்ணலமர்ந்துறை வாக்குமின்கள்
நடலை துரிசு அறுமே.

# சந்திரசேகர மூர்த்தி நாமம் பயின்று வரும் திருமுறைப் பாடல்கள்

### 1ம் திருமுறை - பண் : நட்டபாடை

"இந்தணையும் சடையார்"விடையார்
இப்பிறப் பெனைஅ றுக்கவல்லார்
வந்தணைந்து இன்னி சைபாடு வார்பால்
மன்னினர் மண்ணியிருந்த ஊராம்
கொந்த ணையும்யுங்குழலார் விழவில்
கூட்ட மிடையிடை சேரும் வீதப்
பந்தணையும் விரலார்தம் மவ்வூர்
பசுபதீச் சரம்பாடு நாவே.

### 1ம் திருமுறை - பண் : இந்தளம்

சடையானைச் சந்தினோடு செங்கண் ணரா
உடையானை உடைதலை யிற்பலிகொண்டூரும்
விடையானை விண்ணவர் தாம்தொழும் வெண்ணியை
உடையானை யல்லது உள்காதெ னதுளமே.

### 1ம் திருமுறை - பண் : குறிஞ்சி

"சூடும் இளங்திங்கள்"சுடர்பொன் சடைதாழ
ஓடுண் கலனாக "ஊரிடு பிச்சை
நாடும் நெறியானை" நல்லூர்ப் பெருமானை
பாடும் அடியார்கட்(கு) கடையா பாவமே.

*ஃ பாடலில் சந்திரசேகரர் பிட்க்ஷாடனர் நாமங்கள் பயின்று வருகின்றன.*

### 3ம் திருமுறை - பண் : கொல்லி

பாடினார் அருமறை "பனிமதி சடைமிசை
சூடினார்" படுதலை துன்னெருக் கதனெடும்
"நாடினா ரிடுபலி நண்ணி"யோர் "காலனைச்
சாடினார் "வளநகர் சக்கரப் பன்னியே.

*ஃ பாடல்: சந்திரசேகர, பிட்க்ஷாடன, யமதண்ட மூர்திளை நாம் பயின்று வருகின்றன.*

3ம் திருமுறை — பண் : கொல்லி

முதிரிலா வெண்பிறை சூடினார் முன்னை நாள்
எதிரிலா முப்புரம் எரிசெய்தார் வரைதனால்
அரிதிலாவல்லரக் கன்வலி வாட்டிய
சதிரினார் வளநகர் சக்கரப் பள்ளியே.

# வேடநாமம் பயின்று வரும் பாடல்கள்

01ம் திருமுறை - பண் : தக்கராகம்

"ஏவலத்தால் விசயற் கருள் செய்து"
இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய நடுவாய
மூர்த்தியை யன்றிமொ ழியாள்
யாவர்களும் பரவும் எழில் பாச்சில்
ஆச்சிரா மத்துறை கின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிந்தை செய்வ தோ இவர் ஈடே.

1ம் திருமுறை - பண் : நட்டபாடை

"ஏவார்சிலை எயினன்னுரு வாகியெழில் விசயற்கு
ஓவாதயின் அருள் செய்தவெம்" ஒருவற்கிட முலகில்
சாவாதவர் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபல் முனிவர்தொழு முதுகுன்ற டைவோமே.

1ம் திருமுறை - பண் : வியாழக்குறிஞ்சி

காடது அணிகலம் கரரவம்பதி காததனில்
தோடது அணிகுவர் சந்தரக் காதினில் தூச்சிலம்பர்
"வேடது அணிகுவர் விசயற்கு உருவம் வில்லுங் கொடுப்பர்
பீடது அணிமணி மாடப் பிரமபுரத்தாரே.

1ம் திருமுறை - பண் : பழந்தக்கராகம்

"காடடைந்த ஏனமொன்றின் காரணமாகி வந்து
வேடடைந்த வேடனாக் விசயனெடு எய்தது யென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்கனாற் கருள் செய்
சேடடைந்த செல்வர்வாழும் சேஞ்ஞலூர் மேயவனே.

### 1ம் திருமுறை - பண் : தக்கராகம்

போர்மலி திண்சிலைகொண்டு பூதகணம் சூழப்
"பால்மலி வேடுருவாகிப் பண்டொருவர் கருள்செய்தார்"
ஏர்மலிகேழல் திளைத்த யின்னொளிமாம ணியெங்கும்
கார்மலிவே டர்குவிக்கும் கற்குடிமா மலையாரே.

### 1ம் திருமுறை - பண் : நட்டபாடை

"வசை வில்கொடு வருவேடுவன் அவனாய்நிலை யறிவான்
திசையுற்றவர் காணச்செரு மலைவான்நிலை அவனை
அசையப்பொரு தசையாவணம் அவனுக்குயர் படைகள்
விசயற்கருள் செய்தானி டம்விரி நீர்வியலுரே.

*அ.ப.வி: திசையுற்றவர் -எத்திசைகளிலும் உள்ளவர்கள்.*

### 1ம் திருமுறை - பண் : மேகராகக் குறிஞ்சி

"வேரிமிகு குழலியொடு வேடுவனய் வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்புரிந்தளித்த" புராணர்கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல மலருருத்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்கின்ற திருமுன்றில் புகுந்துலவு முது குன்றமே.

## சிவம் பிட்க்ஷாடணர் "பலியேற்றமை பயின்று வரும் தேவாரப் பாடல்கள்

### 1ம் திருமுறை - பண் : தக்கராகம்

அடல்செவி வேழத்தின் ஈருரி போர்த்து
"அழிதலை அங்கையில் ஏந்தி
உடலிடு பிச்சை யோடு ஐயம்
உண்டியென் றுபல கூறி"
மடல் நெடு மாமலர்க் கண்ணியொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தடமலர் ஆயன தூவித்
தலைவன தாள்நிணல் சார்வோம்.

### 1ம் திருமுறை - பண் : நட்டபாடை

அடைவாகிய அடியார் தொழ "அலரோன்தலை யதனில்
மடவாரிடு பலிவந்துணல் உடைய(ன்)"னவன் இடமாம்
கடையார்தர அகில்லார்கழை முத்தம் நிரை சிந்தி
மிடையார் மொழில் புடைசூழ்தரு விரிநிர் விய லூரே.

### 1ம் திருமுறை - பண் : தக்கேசி

உரமன்னுயர் கோட்டு உலறுகூகை அலறும யானத்தில்
இரவில் பூதம்பாடஆடி எழிலார் அவர் மேலைப்
"பிரமன் தலையில் நறவமேற்ற பெம்மான்" எமையாளும்
பரமன் பகவன் பரமேச்சுவரன் பழனனகராரே.

*குறிப்பு:- நறவம்-பிச்சை யூண்*

### 2ம் திருமுறை - பண் : பியந்தைக்காந்தாரம்

மிடைபடும் துன்பமின்பம் உளதாக்கு(ம்)முள்ளம்
வெளியாக்கு முன்னி உணரும்
"படையொரு கையிலேந்திப் பலிகொள்ளும் வண்ணம்"
ஒலிபாடி யாடிப் பெருமை
உடையினை விட்டுளோரும் உடல்போர் த்துளோரும்
உரைமாயும் வண்ணம் அழியச்
செடிபட வைத்துகந்த சிவன் மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

*அரும்பதவிளக்கம்:- படை - சூலம், கபாலம் - மண்டையோடு, உடைவிட்டவர் - சாக்கியர், உடல் போர்தவர் - சமணர்*

### 3ம் திருமுறை - பண் : புறநீர்மை

ஓலி செய்த குழலின் முழவம தியம்ப ஓசையா லாடல் அறாத
கலி செய்தபூதம் கையினல் இடவே காலினல் பாய்தலும் அரக்கன்
வலிகொள்வர் புலியின் உரிகொவர் ஏனை வாழ்வுநன் றானுமோ
"தலையில்
பலிகொள்வர்"போலும் பந்தணை நல்லூர் நின்றவெம் பசுபதியாரே

**3ம் திருமுறை - பண் : தக்கேசி**

ஓங்கிமேல் உளி தரும் ஒலிபுனல் கங்கையை ஒரு சடைமேல்
தாங்கினார் "இடுபலி தலைகலனாக் கொண்டதம்மடிகள்"
பாங்கினல் உமையொடும் பகலிடம் புகலிடம் பைம்பொழில் சூழ்
வீங்குநீர்த்துருத்தியார் இரவிடத்து உறைவர் வேள்விகுடியே

**1ம் திருமுறை - பண் : தக்கராகம்**

சடைதனைத் தாழ்தலும் ஏற முடித்துச்
சங்க வெண் தோடு சரிந்திலங்க
புடைதனிற் பாரிடஞ் சூழப்
போதருமாறு இவர் போல்வர்
உடைதனில் நால்விரற் கோவண ஆடை
உண்பதும் ஊரிடு பிச்சை
விடைதனை யூர்தி நயந்தார்
வேட்கள நன்ந கராரே.

*அ.பவ.வி: பாரிடம்-பூதம்,நயந்தார்-விரும்பினர்*

**2ம் திருமுறை - பண் : பியந்தைக்காந்தாரம்**

சாகை ஆயிரம் உடையார் சாமமும் ஓதுவ துடையார்
"ஈகையார் கடைநோக்கி இரப்பதும்" பலபல உடையார்
தோகை மாமயில் அனைய துடியிடை பாகமும் உடையார்
வாகை நுண்துளி வீசும் வாழ்கொளி புத்தூர் உனாரே

*அ.ப.வி: - சாகை-மறை,சாமம்-சாமறைஓதுபவர் கடை: -தெருக்கள்.*

# தெட்க்ஷணாமூர்த்தி பயின்று வரும் தேவாரங்கள்

**திருமுறை 02 - பண் : சீகாமரம்**

திறங்கொண்ட அடியார்மேல் தீவினைநோய் வாராமே
"அறங்கொண்டு சிவதர்மம் உரைத்தபிரான்" உறையுமிடம்
மறங்கொண்டங்கு இராவணன்றன் வலிகருத வந்தானை
புறங்கண்ட சடாயுவென்பான் புள்ளிருக்கு வேளூரே

**திருமுறை 01 - பண் : மேகராகக் குறிஞ்சி**

"அறங்கிளரு நால்வேதம் ஆலின்கீழ் இருந்தருள அமரர்வேண்ட
நிறங்கிளர் செந்தாமரையோன் சிரமைந்தின்
ஒன்றறுத்த நிமலர் கோயில்
திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண்டங் (கு)
எழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொளித்த மணி செலவிலக்கி
முந்தலைப்பெய் முதுகுன்றமே

*க்ஷ திருமுறையில் தெட்க்ஷனாமூர்த்தி, வைரவ செயல்கள் பயின்று வருகின்றன.*

**திருமுறை 02 - பண் : இந்தளம்**

காலாலுயிர் காலனை வீடு செய்தாய்
பாலொடு நெய் யாடிய பால்வண்ணனே
வேலாடுகை யாளம் வெண்நவ லுளாய்
ஆலார் நிழலாய் எனும் ஆயிழையே.

*க்ஷ பாடலில் அபிடேகம், தெட்க்ஷனாமூர்த்தி பயின்று வருகின்றன. யமசங்கார மூர்த்தியும்.....*

தருவியல்கானம் தங்கிய துங்கப் பெருவேழம்
மருவளர் கோதை அஞ்சயுரி த்துமறை நால்வர்க்
குருவளர் ஆலநிழல் அமர்ந்து ஈங்குரை செய்தார்
கருவளர் கண்ணார் கோயில் அடைந்தோர் கற்றாரே

**திருமுறை 01 - பண் : மேகராகக் குறிஞ்சி**

தோலுந்தாமரை யாடை அடர்விடு
நூலும் தாமணி மார்பினர்
பாலும் நெய் யின்றாடு பராய்த் துறை
ஆல நிழல் அடிகளே

**திருமுறை 01 - பண் : பழந்தக்கராகம்**

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர் கேட்க நல்கியநல் அறத்தை
ஆலடைந்த நிழல்மேவி அருமறைசொ ன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேஞ்ஞலூர் மேயவனே

**திருமுறை 02 - பண் : இந்தளம்**

மறம்பய மலைந்தவர் மதிர்பரி சறுத்தனை
நிறம்பசுமை செம்மையொடு இசைந்து னதுநீர்மை
நிறம்பயன் உறும்பொருள் தெரிந்துணரு நால்வர்கு
அறம்பயன் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்

*கூஷ பாடலில் திரிபுர தகனமும் பயின்றுள்ளது.....*

மாலுஞ் சோதி மலரானும் அறிகிலா வாய்மையான்
காலங் காம்பு வைரம் கடி கையான் பொற்கழல்
கோலமா ய்கொழு ந்தென்று பவளந் திரண்டதோர்
ஆலநிழல் உளானும் ஐயா றுடைய அடிகளே

*கூஷ திருமுறையில், சிவனிரவு பயின்று வருகிறது.*

**முப்புரதகனம் பயின்றுவரும் திருமுறைப் பாடல்கள்**

**திருமுறை 02 - பண் : இந்தளம்**

அயிலாரும் அம்பதனால் புரம்மூன் றெய்து
குயிலாரு மென்பொழி யாழ்ஒரு கூறாகி
மயிலாரு மல்கியசோ லைமணஞ் சேரி
பயில்வானைப் பற்றிநின்றா ர்க்கில்லை யாவமே

**திருமுறை 02 - பண் : காந்தாரம்**

அலைமல்கு தண்புனலும் மிறையுஞ்சூடி அங்கையில்
கொலைமல்கு வெண்மழுவும் அனலுமேந்துங் கொள்கையீர்
சிலைமல்கு வெங்கணையால் புரமூற்றெரித்தீர் திருநல்லூர்
மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே

### திருமுறை 02 - பண் : இந்தளம்

ஆதியார் அந்தமாயினார் வினை
கோதியார் மதில் சுட்டுஅ ழித்தவர்
நீதியார் நெல்வா யிலார் மறை
ஓதியார் எமது உச்சி யாரே

### திருமுறை 01 - பண் : தக்கராகம்

கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்
அங்கண் அரவம் ஆட்டும் அவர்போலாம்
செங்கண் அரக்கர் புரத்தை எரித்தாரே

### திருமுறை 03 - பண் : காந்தார பஞ்சமம்

இரும்பொனின் மலை வில்லின் எரிசரத்தினால்
வரும்புரங் களைப்பொ டிசெய்த மைந்துனூர்
சுரும்பமர் கொன்றை யும்தூய மந்தமும்
விரும்பியச டை யண்ணல் விசய மங்கையே

### திருமுறை 01 - பண்

இலையார் தருசூலப் படையெம் பெருமானாய்
நிலையார்ம தில்மூன்று நீறாய்விழ எய்த
சிலையான் எருக்கத்தம் புலியூர்திகழ் கோயில்
கலையான் அடியேத்த க்கருதா வினைதானே

### திருமுறை 02 - பண் : பியந்தைக் காந்தாரம்

உரையினில் வந்த பாவம் உணர்நோ ய்களும்
செயல்நீங் குற்றமு லகில்
வரையினி லாமைசெய்த அவைதீரும் வண்ணம்
மிகவேத்தி நித்தம் நினைமின்
வரைசிலையாகவன்று மதில்மூன் றெரித்து
வளர்கங்குல் நங்கைவெருவத்
திரைபொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத்
திருநாரையூர் கைதொழவே.

*க்ஷ பாடலின் நஞ்சு பயின்று வந்துளது.*

# சிவன் நஞ்சுண்டமை (பிரதோசஷ காலம்) பயின்று வருந் திருமுறைப் பாசுரங்கள்

**திருமுறை 01 - பண் : நட்டபாடை**

அச்சமிலர் பாவமிலர் கேடுமிலை அடியார்
நிச்சமுறும் நோயுமிலர் நாழும்நின் றியூரில்
நச்சமிடறு உடையாருறுங் கொன்றை நயந் தாளும்
பட்சமுடை அடிகள்திருப் பாதம்ப ணிவாரே.

**திருமுறை 2 - பண் : காந்தாரம்**

உண்டாய் நஞ்சை உமையாள் பங்கா என்றுள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தைஊ ர்போலும்
வெண்டாமரை போல் கருவண்டு யாழ்செய் வெண்காடே

**திருமுறை 02 - பண் : பியந்தைக்காந்தாரம்**

உரையினில் வந்தபாவம் உணர்நோய்க ளும்
செய்தீங்கு குற்றம் உலகில்
வரையினி லாமைசெய்த அவைதீரு வண்ணம்
முகவேத்தி நித்தநி னைமின்
வரைசி லையாக வன்று மதில்மூனறு மெரித்து
வளர்கங் குல்நங்கை வெருவத்
திரைபொலி நஞ்சமுண்ட சிவன் செல்வத்
திருநாரை யூர்கை தொழுவே

க்ஷ பாடலில் தி. பு. தகனமும் பயின்று வருகிறது.

**திருமுறை 01 - பண் : தங்கராகம்**

கரியவன் நான்முகன் கைாதெழு தேத்தக்
காணலும் சாரலும் ஆகா
எரியுரு வாகியூர் ஐயம்
இடுபலி உ ண்ணின்று ஏந்தி

வரியர வல்குல் மடைந்தை ஓர்பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்
விரிமலர் ஆயின தூவி
விகிர்தன் சேவடி சேர்வோம்

*ஃ பாடலில் பிட்ஷாடன நாமம் பயின்றுளது.*

**திருமுறை 03 - பண் : பழம்பஞ்சுரம்**

கருடனையே றரிஅயனேர் காணா
வெருள் விடை யேறிய மயேந் திரரும்
இருள்தரு கண்டத்தெம் கைலைம லையாரும்
அருளன் ஆருர்திரு ஆனைக் காவே.

*ஃ பாடலின் சிவனிரவும் பயின்று வருகிறது.*

**திருமுறை 08 - பண் : கொல்லி**

காலையார் வண்டினம் கிண்டிய காருறும்
சோலையார் பைங்கிளி சொற்பொருள் பயிலவே
வேலையார் விடமணி வேதியன் விரும்பிடம்
மாலையார் மதிதவள் மாமழ பாடியே

**திருமுறை 03 - பண் : கொல்லி**

கறையணி மிடறுடைக் கண்ணுதல் நண்ணிய
பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுமூர்
பறையணி குருகினம் தூதுமலர் துதையவே
மறையணி நாவினன் மாமழ பாடியே

## சிவாரத்திரி (சோதி தரிசனம்) பயின்றுவரும் பாடல்கள்

அந்தம் முதல் ஆதிபெரு மானமரர்
கோனையஅய ன்மாலும் இவர்கள்
எந்தைபெரு மானிறைவன் என்றுதொழ
நின்றருள்செய் ஈசனிடம் மாம்
சிந்தைசெய்து பாடுமடியா ர்பொடிமெய்
பூசியெழு தொண்டர் இவர்கள்
வந்துபல சந்தமலர் முந்தியணை
யும்பதி நல்கா வியே

## திருமுறை 03 - பண் : பஞ்சுரம்

சக்கரம்வேண் டுமால்பி ரமன்காணா
மிக்கவர் கயிலைமயே ந்திரமும்
தக்கனைத் தலையரிதழ லுருவர்
அக்கணிய வராரூர் அனைக்காவே

*க்ஷ பாடலில், தக்கயாகமும் பயின்றுள்ளது.*

கண்ணனும் நான்முகன் காண்ப ரியான்
வெண்ணாவல் விரும் புமயேந் திரமும்
கண்ணப்பர்க் கருள்செய்த கயிலை யுமெங்கள்
அண்ணல் ஆரூர் ஆதியா னைக்காவே

கடல்வண்ணன் நான்முகன் காண்ப ரியான்
தடவரை அரக்கனைத் தலைநெ ரித்தார்
விடமது உண்ட எம்மயே ந்திரமும்
அடல்விடை ஆருராதி ஆனைக் காவே

*க்ஷ பாடலில் நஞ்சுண்டமை பயின்றுளது (பிரதோஷகாலம்)*

ஆதிமால் அயனவர் காண்ப ரியார்
வேதங்க ள்துதி செ ய்யும்ம கேந்திரரும்
காதிலோ ர்குழையு டைக்கயி லையாரும்
ஆதியாரூர் எந்தை ஆனைக் காவே

அறிவில்அ மண்புத்தர் அறிவுகொ ள்ளேல்
வெறிமான் கரத்து ஆரூர்மயே ந்திரரும்
மறிகடலோ யையன் தேடத் தானும்
அறிவரு கையிலை யோனானைக் காவே

ஏனமால் அயனவர் காண்ப ரியார்
கானமால் கையிலை நன்மயே ந்திரரும்
ஆனவாரூர் ஆதி ஆனைக் காவை
ஞானமார் சம்பந் தன்தமிழ் சொல்லலுமே

**1ம் திருமுறை - பண் : நட்டபாடை (சந்திரசேகரர்)**

முடியார் தருசடைமேல் முளைவெண் மதிசூடி
பொடியாடிய திருமேனியர் பொழில் சூழ்புன மங்கைக்
கடியார்மலர் கொண்டு தன்கழலே தொழுதேத்தும்
அடியார்த மக்கினியா னிடம் ஆலந்துறையதுவே

செறியார்தரு வெள்ளைத் நீற்றின் திருமுண்டப்
பொறியார்தரு புரிநூல்வரை மார்பன் புளமங்கை
வெறியார்தரு கமலத் தயன்மாலுந் தனைநாடி
அறியாவகை நின்றானிடம் ஆலந்துறை அதுவே.

## காளி அம்பாள் நாமம் பயின்று வரும் பாடல்கள்

**திருமுறை 01 - பண் : காந்தாரம்**

நதியதன் அயலே நகுதலை மாலை
நாள்மதி சடைமிசை அணிந்து
கதியதுவாகக் காளிமுன் காணாக்
கானிடை நடஞ்செய்த கருத்தர்
விதியது வழுவா வேதியர் வேள்வி
செய்தவர் ஓத்தொலி ஓவா
மதியது வாகப் பாவையும் தாமும்
பாம்புர நன் நகரே

**திருமுறை 03 - பண் : சாதாரி**

பழகமா மலர் பளித்து இறைஞ்சு வார்பாற் செறிந்த
குழகனார் குணம்பு கழ்ந்து ஓதுவார் அவர் பலர் கூட
கழகனார் கரியுரித்து ஆடுங்காளர்நம் காளியேத்தும்
அழகனார் அரிவையோ டிருப்பிடம் அம்பர்மா காளம் தானே

**திருமுறை 01 - பண் : புறநீர்மை**

புள்ளித்தோல் ஆடை பூண்பது நாகம் பூசுசாந்த ம்பொடி நீறு
கொள்ளிதீ விளக்குக் கூளிகள் கூட்டம்
காளியைக் குணம்செ ய்த கூத்தன்
அள்ளற்கார் ஆமை அகடுவான் மதியம்

ஏய்க்கமுள் தாழைகள் ஆனை
வெள்ளைக் கொம் பனும்வி ரிபொழில் வீதி
மிழலையான் என்வினை கெடுமே

## அபிஷேகம் பயின்றுவரும் திருமுறை பாசுரங்கள்

### திருமுறை 03 - பண் : காந்தாரபஞ்சமம்

"ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்"
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாய்இடமாக நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுமல் கீதமும்
பல்சடைப்பணி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்காம் தொல்வினையே

### திருமுறை 02 - பண் : இந்தளம்

"ஆனில் அம்கிளர் ஐந்தும்" அவிர்முடி ஆடியோர்
மானின் அங்கையி னன்மணம் ஆர்மங் கலக்குடி
ஊனில் வெண்டலைக் கையுடை யானுய் பாதமே
ஞானமாக நின்று ஏத்தவல் லார்வினை நாசமே.

*க்ஷ பாடலில் வைரவ சுவாமி கோலம் பயின்றுளது.*

### திருமுறை 03 - பண் : பழம்பஞ்சுரம்

ஊனுடை வெண் தலைகொண் டுளல்வான்
ஒளிர்புன் சடைமேலோர்
வானிடை வெண் மதிவைத்து உகந்தான்
வரிவண்டு யாழ்முரலத்
தேனுடை மாமல ரன்னம் வைகும்
திருநாரை யூர்மேய
"ஆனிடை ஐந்து உகந்தான்"அடியே
பரவி அடைவோமே.

*க்ஷ பாசுரத்தில் வைரவ கோலம் பயின்றுளது.*

### திருமுறை 03 - பண் : பழம்பஞ்சுரம்

ஊமை ராக்கை உடம்பு தன்னை உணரிற் பொருளென்று
தேனமர் கொன்றையினன் அடிக்கே சிறுகாலை யேத்துமினோ
ஆன்அ மர்ஜந்துங் கொண்டு ஆட்டுகந்த அடிகள் இடம்போலும்
வானவர் நாள்தொறும் வந்து இறைஞ்சும் வலம்புரநன் நகராரே

### திருமுறை 02 - பண் : இந்தளம்

காலால் உயிர் காலனை வீடு செய்தாய்
"பாலொடு நெய் யாடிய பால்வண் ணனே"
வேலாடுகை யாளம் வெண் நாவ லுளாய்
ஆலார் நிழலாய் எனும் ஆயிழை யே

*ஃ பாடலில் தெட்ஷனாமூர்தத நாமமும் பயின்றுளது.*

### திருமுறை 03 - பண் : அந்தாளிக்குறிஞ்சி

காவியங் கண்மட வாளொடும் காட்டிடை
தீயகல் ஏந்திநின்று ஆடுதிர்தேன் மலர்
மேவிய தண்பொழில் வெள்ளாடை மேவிய
"ஆவினில் ஐந்துகொண்டு ஆட்டுஉ கந்தாரே"

### திருமுறை 03 திருமுக்கால் - பண் : சாதாலி

"நல்லவெண்ணெய் விழுதுபெய்து ஆடுகதிர் நாள்தொறும்"
நெல்வெண்ணை மேவிய நீரே
நெல்வெண்ணெய் மேவிய நீர்மை நாள்தொறும்
சொல்வணம் இடுவது சொல்லே

### திருமுறை 01 - பண் : தக்கராகம்

"பாலும் நெய்யும் தயிரும் பயின்றாடித்"
தோலும் நூலும் துதைந்த மணிமார்மர்
மாலும் சோலை புடைசூழ் மடமஞ்சை
ஆலும்சோ ற்றுத்துறை சென்ற டைமின்னே

### திருமுறை 03 - பண் : கொல்லி

மருந்துவேண் டிலிவை மந்திரங்கள் இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணிய ங்களிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வேத்திய
அருந்தவத் தோர்தெழும் அடிகள் வேடங்களே

மானம்ஆக் குவன மாசுநீர்க் குவன
வாளையுள் கச்செலும் விழிகள் காட்டுவ் வன
தேனும்வ ண்டுமிசை பாடுந்தே வன்கு
"ஆனஞ்சா டும்முடி அடிகள் வேடங்களே"

# நாவுக்கரசு சுவாமிகள் அருளிய பாசுரங்கள் கணபதி நாம் பயின்று வருவது

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

கோவாய இந்திரனுள் ளிட்டர் ஆகக்
குமரனும் விக்னவி நாய கன்னும்
பூவாய பீடத்து மேல யனும்
பூமிய ளந்தானும் போற்றி சைப்ப
பாவாய இன்னிசைகள் பாடி ஆடிப்
பாரிடமுந் தாமும் மற்றிம்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்கப்
புறம்பயம்நம் மூரென்று போயினாரே

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார் கருளும் பரிசுங் கண்டேன்
பாராய்க் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் "விநாயகனுந் தோன்றக் கண்டேன்"
மருந்தாயம் பிணிதீர்கு மாறுக ண்டேன்
வாய்மூர் அடிகளை நான்கண் உவாறே.

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

முந்தைகாண் மூவரிலும் முதலானா ன்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் "முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண்" தாழ்ந்தடியே வணங்கு வார்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையொன்றேனும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே

## கந்த(ன்) நாமம் பயின்றுவரும் பாசுரங்கள்

### திருமுறை 04 - தனித்திருநேரிசை

உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகளியாக
மடம்படும்உணர் நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படும் ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே

### திருமுறை 04 - திருநேரிசை

செல்வியைப் பாகங் கொண்டார்
"சேந்தனை மகனாக் கொண்டார்"
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர் க்கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத
காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
எல்லியை விளங்க நின்றார்
இலங்கு மேற்ற ளியனாரே

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

படைமலிந்த மழுவாளும் மானும் தோன்றும்
"பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்"
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையின் ஓவிதோ ன்றும்நய னந் தோன்றும்

உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்
முரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவுந்தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே

### திருமுறை 04 - திருநேரிசை

மாலனமாயன் றன்னை மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசு பதி யார் பால்வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார் காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
ஏலநற் கடம்பன் தாந்தை இலங்குமேற் றளிய னாரே

## வீரபத்திர நாம் கோலம் பயின்று வரும் பாடல்கள்

### திருமுறை 04 - பண் : இந்தளம்

உதைத்தார் மறலி உருளவொர் காலால்
"சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல் வேழ்வி"
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய் யோன்கண்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே

### திருமுறை 06 - தனித்திருத்தாண்டகம்

"எச்சன் நிணத் தலைகொண்டார் பகன்கண் கொண்டார்
இரவிகள் லொருவன்பல் இறுத்துக் கொண்டார்
மெச்சன் வியத் திரன்தலையும் வேளுக் கொண்டார்
உச்ச நமன் தாழறுத்தார் சந்திரனை உதைத்தார்
உணர்விலாத் தக்கன்தன் வேழ்வி எல்லாம்
அச்மெழ அழித்துக்கொண் டருளுஞ் செய்தார்"
அடியேனை ஆட்கொண்ட அமலர் தாமே

### திருமுறை 06 - திருத்தாண்டகம்
### (வீரபத்திர வைரவ நாமம் பயின்றுள்ளது)

"சிரமேற்ற நான்முகன்றன் தலையும் மற்றைத்
திருமால்தன் செழுந்தலையும் பொன்றச் சிந்தி"
"உரமேற்ற இரவிபல் தகர்த்துச் சோமன்
ஒளிர்கலைகள் படவுளக்கி உயிரை நல்கி

நரையேற்ற விடையேறி நாகம் பூண்ட
நம்பியையே" மறைநான்கு ஓலமிட்டு
வரமேற்கும் மழபாடி வயிரத் தூணே
என்றென்றே நானரற்றி நைகின் றேனே

## திருமுறை 04 - திருவிருத்தம்
## (வைரவர் வடிவமும் திரிபுரதகனமும் பயின்றுள்ளது)

"தக்கன்றன் வேள்வி தகர்த்தவன்" சாரமதுவன் றுகேள்
மிக்கன் மும்மதி வீரவொர் வெஞ்சிலை கோத்தொர் அம்பால்
புக்கனன் பொன்திகழ் தன்னதோர் பூந்திருத்தி யுறையும்
"நக்கனை" நங்கள்பிரான்றனை நானடி போற்றுவதே

## திருமுறை 04 - திருக்குறுந்தொகை

மன்றனை "மதியாயாதவன் வேள்விமேல்
செற்றனை"த்திரு வண்ணா மலையனை
வென்ற னைவெகுண்டார்புரம் மூன்றையும்
கொன்றனை க்கொடியே ன்மறந்து உய்வனே

## திருமுறை 04 - திருத்தாண்டகம்

பற்றவன் காண் ஏனோர்க்கும் வானோருக்கும்
பராபரன் காண்" தக்கன்றன் வேள்வி செற்ற
கொற்றவன் காண்" கொடுஞ்சினத்தை யடங்கச் செற்று
ஞானத்தை மேன்மி குத்தல் கோளாக் கொண்ட
பெற்றியன் காண் பிறங்கருவிக் கழுக்குன்றத் தெம்
பிஞ்ஞகன் காண் பேரொழிலார் காமவேளைக்
செற்றவன் காண் சீர்மருவு திருப்புத் தூரில்
திருத்தளியான் காண் அவனென் சிந்தை யானே

*க்ஷ தாண்டகத்தில் வைரவ, வீரபத்திர காமங்கள் பயின்றுளன.*

## வைரவ நாமம் செயல் பயின்று வரும் பாடல்கள்

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

"அறுத்தான்காண் அயன்சிரத்தை" அமரர் வேண்ட
ஆழ்கடலின் நஞ்சுண்டங் கணிநீர்க் கங்கை
செறுத்தான்காண் தேவர்குங் தேவன்தா ன்காண்
திசையனத்துந் தொழுதேத்தக் கலைமான் கையில்
பொறுத்தான்காண் புகலிடத்தை நலிய வந்து
பொருகயிலை எடுத்தவன்தன் முடிதோள் நாலஞ் (சு)
இறுத்தான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே

*க்ஷ தாண்டகத்தில் நஞ்சூண் பயின்றுளது.*

### திருமுறை 06 - தனித்திருத்தாண்டகம்

ஆமயந்தீர்த் தடியேனை ஆளாக் கொண்ட
அதிகைவீ ரட்டானம் ஆட்சி கொண்டார்
"தாமரையோன் சிரமரிந்து கையிற் கொண்டார்
தலையதனிற் பலிகொண்டார்" நிறைவாந் தன்மை
"வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார்"
மானிடங்கொ ண்டார் வலங்கைமழுவாள் கொண்டார்.
காமனையும் உடல்கொண்டார் கண்ணால் நோக்கிக்
கண்ணப்பர் பலியுங்கொள் கபாலி யாரே

*அ. ப. வி. ஆமயம் பிறவிப்பிணி....*

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

எல்லாம்முன் தோன்றாமே தோன்றினான் காண்
ஏகம்பம் மேயான்காண் இமையோ ரெத்தப்
பொல்லாப் புலனைந்தும் போக்கி னான்காண்
புரிசடைமேற் பாய்கங்கை பூரித்தா ன்காண்
நல்லவிடை மேற்கொண்டு நாகம் பூண்டு
"நளிர்சிரமொன் றேந்தி"யோர் நாணா யற்ற
கல்லாடை மேற்கொண்ட காபாலி காண்
காளத்தியான் என்க ன்னு ளானே

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

எல்லாம்முன் தோன்றாமே தோன்றினான்காண்
ஏகம்பம் மேயான்காண் இமையோ ரேத்தப்
பொல்லா புலனைந்தும் போக்கினான் கான்
புரிசடைமேற்பாய் கங்கை பூரித்தான்காண்
நல்லவிடை மேற்கொண்டு நாகம் பூண்டு
நளிர்சிரமொன் றேந்தியோர் நாணா யற்ற
கல்லாடை மேற்கொண்ட காபாலி காண்
காளத்தியான் என்க ண்ணுனானே

### 6ம் திருமுறை - திருத்தாண்டகம்

எல்லாம்முன் தோன்றாமே தோன்றினா ன்காண்
ஏகம்பம்மேயா ன்காண் இமையோ ரேத்தப்
பொல்லாப் புலனைந்தும் போக்கினான் காண்
புரிசடைமேற் பாய்கங்கை பூரித்தான் காண்
நல்லவிடை மேற்கொண்ட நாகம் பூண்டு
"நளிர்சிரமொன் நேற்தியோர் நாணா யற்ற
கல்லாடை மேற்கொண்ட கபாலி" காண்
காளத்தியானவனென் கண்ணுளானே

### திருமுறை 04 - திருநேரிசை

"கையராய்க் கபாலமேந்திக்" காமனைக் கண்ணாற் காய்ந்து
மெய்யராய் மேனிதன்மேல் விளங்கு வெண்நீ றுபூசி
உய்வரா உள்கு வார்க்கு உவகைகள் பலவுஞ் செய்து
பையரா அரையில் ஆர்த்துப் பருப்பதம் நோக்கி னாரே

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

"சிரமேற்ற நான்முகன்றன் தலையும்" மற்றைத்
திருமால்தன் செழுந்தலையும் பொன்றச் சிந்தி
உரமேற்ற இரவிபல் தகர்நுச் சோமன்
ஒளிர்க்கலைகள் படவுழக்கி உயிரை நல்கி

நரையேற்ற விடையேறி நாகம் பூண்ட
நம்பியையே மறைநான்கு மோல மிட்டு
வரவேற்கும் மழபாடி வைரவத் தூணே
என்றென்றே நானரற்றி நைகின் றேனே

க்ஷ பாடலில் வைரவ, வீரபத்திர நாம் பயின்றுளன.

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

தன்னடியாற் கருள்புரிந்த தகவு தோன்றும்
"சதுர்முகினைத் திலையரிந்த தன்மை தோன்றும்"
மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்
வேழத்தின் உரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்
துன்னியசெஞ்சடைமேலோர் புனலும் பாம்பும்
தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே

## சிவம் வேடன் நாமம் பயின்று வரும்பாசுரங்கள்

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

நீண்டவர்க்கோர் நெருப்புருவ மானார் தாமே
நேரிழையை ஒருபாகம் வைத்தார் தாமே
பூண்டரவப் புலித்தோல்மே லார்த்தார் தாமே
பொன்னிறத்த வெள்ளச் சடையார் தாமே
ஆண்டுலககே ளனைத்தினையும் வைத்தார் தாமே
அங்கங்கே சிவமாகி நின்றார் தாமே
"பாண்டவரிற் பார்த்தனுக்குப் பரிந்தார் தாமே"
பழன நகரெம் பிரானார் தாமே

அ.ப. வி நீண்டவர் (கள்) பிரம்ம, விஸ்ணு இவர்கள் தேவனின் திருப்பாதத்தையுந் திருமுடியையும் மண்ணில் ஊடுருவியும் விண்ணிற் பறந்தும் காண்கிலார்.... வேட வடிவங்கொண்டு சென்று பன்றிக் கெய்து அர்ச்சுனருடன் போரிட்டுப் பாசுபத அஸ்திரங் கொடுத்தவர்.

## திருமுறை 06 - திருத்தாண்டகம்

பாடகஞ்சேர் மெல்லடிநற் பாவை யாளும்
நீயும்போய்ப் "பார்த்தனது பலத்தைப் காண்பான்
வேடனாய் வில்வாங்கி யெய்த நாளோ"
விண்ணவர்க்குங் கண்ணவனாய் நின்ற நாளோ
மாடமொடு மாளிகைகள் மல்குதில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே

## திருமுறை 04 - திருநேரிசை

"பார்த்தானுக் கருள்வார் போலும்" படர்சடை முடியர்போலும்
ஏத்துவார் இடர்கள் தீர இன்பங்கள்கொ டுப்பார்போலும்
கூத்தராய்ப் பாடியாடிக் கொடுவலி அரக்கன்றன்னை
ஆர்த்தவாய் அலறுவிப்பார் ஆடுவது றையனாரே

## திருமுறை 04 - திருவிருத்தம்

மற்றிட மின்றி மனைதுறந்து அல்லுணா வல்லமணர்
சொற்றிட மென்று துரிசுபட் டேனுக்குமு ண்டுகொலோ
"விற்றிடம் வாங்கி விசயனொடு அன்றொரு வேடுவனாய்"
புற்றிடங் கொண்டான்றன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே.

*சொற்பொருள்: - அல்- பகல் (சமணர் பகலுணவு உண்பதில்லை)*

## திருமுறை 05 - திருக்குறுந்தொகை

வாடி நீ வருந்தாதே மனிதர் காள்
"வேடனாய் விசயற்க ருள்செ ய்தவெண்
காடனார்" உறை கின்ற கருவிலிக்
கோடு நீழ்பொழிற் கொட்டிட்டை சேர்மினே

## திருமுறை 04 - திருவிருத்தம்

வானவர் தானவர் வைகல் மலர்கொண ர்ந்து இட்டிறைஞ்சி
தானவர் மால்பிர மன்னறியாத தகமை யினான்
ஆனவன் ஆதிபுராண் "னன்றோடி யபன்றிஎய்த
கானவனைக்" கண்டியூரண்ட வாணர் தொழு கின்றதே

## திருமுறை 05 - திருக்குறுந்தொகை

வாடி நீர்வருந் தாமே னிதர்கள்
"வேடனாய் விசயற்க ருள்செய தவெண்
காடனார்" உறை கின்றக ருவிலிக்
கோடு நீழ்பொழிற் கொட்டிடை சேர்மனே

## திருமுறை 06 - திருத்தாண்டகம்

வானவர்கோன் தோளிறுத்த மைந்தன் தன்னை
வளைகுளமும் மறைக்காடும் மன்னி னானை
ஊனவனை உயிரவனை யொருநாட் "பார்த்தன்
உயர்தவத்தின் நிலையறிய லுற்றுச் சென்ற
கானவனை" க்கயிலாயம் மேவினா னைக்
கங்கைசேர் சடையானைக் கலந்தார்க் கென்றுந்
தேனவனைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே

## திருமுறை 04 - பண் இந்தளம்

வீரமும் பூண்பர் "விசயனொ டாயதொர்
தாரமும் பூண்பார்" தமக்கன்பு பட்டவர்
பாகமும் பூண்பார்நற் பைங்கண் அரவு
ஆரமும் பூண்பார் அரநெறி யாரே

*சொற்பொருள் :- தாரம் - உனம், பாகம் - அம்மையும் பாகமுடையவர்*

## திருமுறை 04 - திருநேரிசை

வெங்கடுங் கானகத்தேழை தன்னெடும் வேடனாய்ச் சென்று
அங்கமர் மலைந்து பார்த்தற்கு அடுசரம் அருளினானை
மங்கையர் ஆடல் ஓ-வா மன்னுகா ரோணத்தானைக்
கங்குலும் பகலுங் காணப் பெற்று நாம்க ளிதத்தவாறே

## திருமுறை 04 - பண் : காந்தாரம்

அடுத்தானை உரித்தானை "அரச்சுனர்க்குப் பாசுபதம்
கொடுத்தானைக்" குலவரையே சிலையாக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கைலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே.

### திருமுறை 05 - திருக்குறுந்தொகை

ஆர்த்த தோலுடை கட்டியோர் "வேடனாய்
பார்த்தனோடு படைதொடு" மாகிலும்
பூத்த நீழ்பொழிற் பூந்துருத் திந்நகர்த்
தீர்த்தன் சேவடிக் கீழ்நாம் இருப்பதே

### திருமுறை 04 - திருநேரிசை

"பார்தனோ டமர்பொருது பத்திமை காண்பர் போலும்
கூர்த்தவாய் அம்பு கோத்துக் குணங்களை அறிவார் போலும்
போர்த்துமோர் ஆவ நாழி அம்பொடும் கொடுப்பார் போலும்"
தீர்த்தமாம் பழனை மேய திருவாலங் காட னாரே

### திருமுறை 04 - திருவிருத்தம்

"மெய்யம்பு கோத்த விசயனொடு அன்றொரு வேடுவனாய்
பொய்யம்பு எய்து ஆவ மருளி ச்செய்தா ய்"புரமூன் றெரியக்
கையம்பு எய்தாய் நுன்க ழலடி போற்றாக்கயவர் நெஞ்சில்
குய்யம் பெய்தாய் கொடிமா மதில்சூழ் கச்சியே கம்பனே

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

"வில்லாடி வேடனே" யென்றேன் நானே
வெண்ணீறு மெய்க்கணிந்தாய் என்றேன் நானே
சொல்லாய சூழலா யென்றேன் நானே
சுலாவாய தொல்நெறியே யென்றேன் நானே
எல்லாமா யென்னுயிரே யென்றேன் நானே
இலங்கையர்கோன் தோளிறுத்தா யென்றேன் நானே
அல்லாவினை தீர்க்கும் ஐயா றன்னே
என்றென்றே நானரற்றி நைகின் றேனே

### திருமுறை 05 - திருக்குறுந்தொகை

வேடனாய்விசய னொடு மெய்துவெம்
காடு நீடுகந்து ஆடிய கண்ணுதல்
மாட நீடிய ருந்திரு மாற்பேறு
பாடு வார்பெறு வார்பர லோகமே

### திருமுறை 06 - திருத்தாண்டகம்

"வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
விற்பிடித்துக் கொம்புடைய ஏனத்தி ன்பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ளக்
கொலைப்பகழி உடன் கோத்துக் கோரப்பூசல்
ஆடினார்" பெருங்கூத்துக் காளி காண
அருமறையோ டாறங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உயர்ந்த வாறே

*கூஷ பாடலில் காளி நாம் பயின்றுளது.*

*சொ. பொ. வி:- ஏனம்- பன்றி (உமையவளுங் + கோலங்கொண்டு உமையம்மை (யாள்) உடன்வர கொலை + பகழி- கொல்லும் + அம்பு, கோரப் + பூசல், கொடி - யுத்தம்*

## பிட்சஷாடன (காம) கோலம் பயின்று வரும் பாடல்கள்

### திருமுறை 05 - திருக்குறுந்தொகை

எடுத்த வெல்கொடி யேறுடை யான்தமர்
உடுப்பர் கோவணம் "உண்பது பிச்சையே"
கெடுப்பதாவது கீழ்நின்ற வல்வினை
விடுத்துப் போவது வீழி மிழலைக்கே

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

"ஓட்டகத்தே ஊணாக உகந்தார் போலும்"
ஒருருவாய்த் தோன்றி உய்ந்தார் போலும்
நாட்டகத்தே நடைபலவும் நவின்றார் போலும்
ஞானப்பெ ருங்கடற்கோர் நாதர் போலும்
காட்டகத்தே ஆடல் உடையார் போலும்
காமரங்கள் பாடித்திரிவார் போலும்
ஆட்டகத்தில் ஆனைந்து உகந்தார் போலும்
அணியாரூர் த்திருமூலட் டான னாரே.

*கூஷ தாண்டகத்தில் அபிடேகம் பயின்றுளது.*

### திருமுறை 04 – திருவிருத்தம்

எரியும் மழுவினன் எண்ணியும் "மற்றொரு வன்தலையுள்
திரியும் பலியினன்" தேயமும் நாடுமெல்லா முடையான்
விரியும் பொழிலணி சேறுதிகழ்திரு வேதிக்குடி
அரிய அமுதினைய ன்பர்களோடடை ந்தாடுதுமே.

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

பஞ்சடுத்த மெல்விரலாள் பங்கர் போலும்
பைந்நாகம் அரைக்கசைத்த பரமர் போலும்
மஞ்சடுத்த மணிநீல கண்டர் போலும்
வடகயிலை மலையுடைய மணாளர் போலும்
செஞ்சடைக்கண் வெண்பிறைகொண் டணிந்தார் போலும்
திருவீழி மிழலையமர் சிவனார் போலும்
அஞ்சடக்கும் அடியவர்கட் கடியார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.

*க்ஷ தாண்டகம் பிரதோக்ஷ காலம் (நஞ்சு) பயின்றுள்ளது.*

### திருமுறை 04 – திருநேரிசை

சீர்மலி செல்வம் பெரிதுடை செம்பொன் மாமலையே
கார்மலி சோலையுலாவு கடல் நாகைக் காரோணனே
"வார்மலி மென்முலையார் பலவந்(து)திட மெல்லச் சென்றிரந்து
ஊர்மலி பிச்சைகொடு உண்பது மாதிமை யோஉ ரையே"

### திருமுறை 06 – தனித்திருந்தாண்டகம்

நல்லூரே நன்றாக நட்ட மிட்டு
நரையேற்றைப் பழையாறே பாயவேறிப்
"பல்லூரும் பலிதிரிந்து சேற்றூர் மீதே
பலர்காணத் தலையாலங் காட்டி னூடே
இல்லார்ந்த பெருவேளூர் தனியே பேணி
யிராப்பட்டீச்சரங் கடந்து மணற்கால்புக்கு
எல்லாருந் தளிச்சாத்தங் குடியிற் காண
இறைப் பொழுதில் திருவாரூர் புக்கா தாமே".

**திருமுறை 06 – பண் : இந்தளம்**

அக்கமார் அணிவடம் ஆகத்தர் நாகத்தர்
நக்கார் இளமதிக் கண்ணியர் நாள்தொறும்
உக்கார் "தலையிடத்து உண்பலிக் கூர்தொறும்
புக்கார்" புகலூர்ப்புரிசடை யாரே.

**திருமுறை 05 – திருக்குறுந்தொகை**

உச்சி வெண்மதி சூடினும் ஊனறாப்
"பச்சை வெண்தலை யேந்திப் பல்லில்லம்
பிச்சையே புகுமா கிலும்" வானவர்
அச்சந் தீர்தரு ளாயென் றடைவரே.

**திருமுறை – தனித் திருவிருத்தம்**

உன்மத்தக மலர்சூடி உலகந்தொ ழச்சுடலை
பன்மத் தகங் கொண்டுபல்கடை தோறும்ப லிதிரிவான்
என்மத்தகத் தேயிரவும் பகலும்பி ரிவரியான்
தன்மத்தக த்தோரிளம்பிறை சூடிய சங்கரனே.

*சொ.பொ.விளக்கம் : உன்மத்தகம் - ஊமத்தம்மலர், பன்(ல்) மத்தகம் - மண்டையோடு, என்மத்தகம் - அடியேன் சிந்தை.*

**திருமுறை 05 – திருக்குறுந்தொகை**

கூறேறும் உமை பாகமோர் பாலராய்
ஆறேறும் சடை மேற்பிறை சூடுவார்
"பாறேறுந்தலை யேந்திம்ப லஇல்லம்
ஏறேறும் எந்தையைக்" கண்டதென் உள்ளமே.

**திருமுறை 05 – திருக்குறுந்தொகை**

சுற்றும் பேய்சூழ லச்சுடு காட்டிடை
பற்றி ஆடுவர் பாய்புலித் தோலினர்
"மற்றை யூர்களெல் பலிதேர்ந் துபோய்
ஒற்றியூர் புக்கு உறையு மொருவரே".

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

பட்டி யேறுகந் தேறிப் "பல்லிலம்
இட்டம ாஇரந்து ண்டுஉ ழிதரும்
அட்ட மூர்த்திய" ண்ணாமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லைக் காண்மீனே.

### தெட்ஷணாமூர்த்தி நாமம் பயின்றுவரும் பாசுரம்

அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் "ஆல்நீழாய்" ஆனேறு ஊர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடை யினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர் தாண்டாய்
சங்கையொ ன்றின்றியே "தேவர் வேண்ட
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவாமூவ
சிங்கமே" உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. – திருத்தாண்டகம்

*கூஷ தி. தாண்டகத்தில் நஞ்சுண்டமையும் பயின்றுளது.*

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"ஆலாத்தார் நீழலில் அறம்நா ல்வர்கு
கோலத்தால் உரைசெ ய்தவன்" குற்றமில்
மாலுக்கு ஆரருள் செய்தவன் மாற்பேறு
ஏலத்தா ன்தொழு வார்க்கி டரில்லையே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

சிட்டனைச் சிவனைச் செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை "ஆழநீ ழலமர்"
பட்டனைத் திருப்பா ண்டிக்கொ டுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே.

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக் கத்தைப்
பேணிநினைந் தெழுவார்தம் மனத்தே மன்னி
இருந்தமணி விளக்கதனை நின்ற பூமேல்
எழுந்தருளி யிருந்தானை எண்டோள் வீசி

அருந்திறல்மா நடமாடும் அம்மான் தன்னை
அங்கனகச் சுடர்க்குன்றை "அன்றாலின் கீழ்
திருந்துமறைப் பொருள்நால்வர்க் கருள்செ ய்தானை"
செங்காட்டங்குடியதனில் கண்டேன் நானே.

### திருமுறை 04 – திருநேரிசை

வருந்தின நெருனல் இன்றாய் வளங்கின நாளர் "ஆல்கீழ்
இருந்தநன் பொருள்கள் இயம்பினர்" இருவரோடும்
பொருந்தினர் பிரிந்து தம்பால் பொய்யராம் அவர்கு என்றும்
விருந்தினர் திருந்துவீழி மழலையுள் விகிர்த னாரே.

## திரிபுரதகனம் பயின்று வரும் பாசுரங்கள்

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"அயிலார் அம்பெரி மேருவில் லாகவே
எயிலாருரு பொடி யாய்விழ எய்தவன்"
குயிலாரும் பொழிற் கொண்டீச்சரவனை
பயில்வா ரும்பெரு மைபெறும் பாலரே.

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

அல்லிமலர் நாற்றத் துள்ளார் போலும்
அன்புடையார் சிந்தை அகலார் போலும்
சொல்லின் அருமறைகள் தாமே போலும்
தூநெறிக்கு வழிகாட்டுந் தொழிலார் போலும்
"வில்லிற் புரமூன் றெரித்தார் போலும்"
வீங்கிருளும் நல்வெளியு மானார் போலும்
எல்லி நடமாட வல்லார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீசனாரே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

அட்ட மூர்த்ய தாகிய அப்பரோ
"துட்டர் வான்புரம் சுட்ட சுவண்டரோ"
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக்கத வம்பிரி விப்பினே.

*சொற். பொருள் : சுவண்ட(ர்), ரோ - அழக(ர்) அழகரோ.*

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

அரிய நான்மறை ஓதிய வாயரோ
"பெரிய வான்புரம் சுட்ட சுவண்டரோ"
விரிகொள் கோவண ஆடைவி ருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே.

### திருமுறை 04 – திருநேரிசை

உவந்திட்டாய் அங்குமையோர் பாகம் வைத்தவர் ஊழிஉழி
பரந்திட்ட "பரம னார்தான் மலைசிலையாக நாக மேற்றிக்
கவர்ந்திட்ட புரங்கள்மூன்றுங் கனலெரியா கச்சிறீச்
சிவந்திட்ட கண்ணர் போலும்"திரு பயற்றூரனாரே.

### திருமுறை 04 – திருக்குறுந்தொகை

வட்டமினைம்மதி சூடியை வானவர்
சிட்டனை த்திரு அண்ணா மலையனை
இட்டனை "இகழ்ந்தார் புரம்மூ ன்றையும்
அட்ட னை"யடியே ன்மறந் துய்வனோ.

### திருமுறை 04 – திருநேரிசை

வான னைம்மதி சூடியமை ந்தனை
தேன னைத்திரு வண்ணா மலையனை
ஏன னையிகழ் தார்புர மூன்றெய்த
ஆன னையடி யேன்மற ந்துய்வனோ.

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

ஆரார் "திரிபுரங்கள் நீறா நோக்கம்(கும்)
அனாலாடி" ஆரமுதே யென்றேன் நானே
கூராற் மழுவாட் படையொ ன்றேந்திக்
குறட்பூதம் பல்படையா என்றேன் நானே
பேராயிர முடையாய் யென்றேன் நானே
பிறைசூடும் பிஞ்ஞகனே என்றேன் நானே
ஆரா அமுதேயென் ஐயாறென்னே
என்றென்றே நாரைற்றி நைகின் றேனே.

### திருமுறை 04 – திருநேரிசை

இலையுடைப் படைகையேந்தும் இலங்கையா்ம மன்னன்றன்னைத்
தலையுடலடர்தது மீண்டே தானவற்க முள்கள்செய்து
"சிலையுடன் கணையைச் சேர்த்துத் திரிபுர மெரியச் செறற
நிலையுடை யடிகள்" போலும் நின்றநெய் த்தானனாரே.

### திருமுறை 04 – திருநேரிசை

கரவிலாமனத்த ராகிக் கைதொழு வார்கட் கென்றும்
இரவு நின்று எரியதாடி இன்னருள் செய்யு மெந்தை
"மருவலார் புரங்கள் மூன்றும் மட்டிய வகைய ராகிப்"
பரவுவார்க கருள்கள் செய்து பருப்பதம் நோக்கி னாரே.

### திருமுறை 04 – திருநேரிசை

கண்ணினாற் காமவே ளைக் கனலெழ விளிப்பர் போலும்
"எண்ணிலார் புரங்கள் மூன்றும் எரியுணச் சிரிப்பர் போலும்"
பண்ணி(ன்)னார் முழவம் ஓவாப் பைம்பொழில் பழனை மேய
அண்ணாலா ரெம்மை யாளும் ஆலங்காட் டடிக ளாரே.

## (பிரதோஷகாலம்) நஞ்சுண்டமை பயின்று வரும் பாசுரங்கள்

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

அஞ்சுண்ண வண்ணனே என்றேன் நானே
அடியார்கட் காரமுதே என்றேன் நானே
"நஞ்சணி கண்டனே" என்றேன் நானே
நாவலர்கள் நான்மறையே என்றேன் நானே
நெஞ்சுணர உள்புக் கிருந்த போது
நிறையும் அமுதமே என்றேன் நானே
அஞ்சாதே யாள்வானே ஐயாற னனே
யென்றென்றே நானரற்றி நைகின் றேனே.

### திருமுறை 04 – திருநேரிசை

அடல்விடை யூர்தி யாகி அரக்கன்தோள டரவூன்றிக்
"கடலிடை நஞ்சம் உண்ட கறையணை கண்டனார்" தாம்
சுடர்விடுமேனி தன்மேல் சுண்ணவெண் நீறு பூசி
படர்சடை மதியம் சேர்த்திப் பருப்பத நோக்கி னாரே.

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

ஆட்சி யுலகை உடையா ய்போற்றி
அடியார் கமுதெலா மீவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதா தாய் போற்றி
சூழ்ந்த "கடல் நஞ்சை உண்டா ய்போற்றி"
மாட்சி பெரிதும் உடையா ய்போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தா ய்போற்றி
காட்சி பெரிதும் அரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

ஊரிலா யென்று ஒன்றாக உரைப்பதோர்
பேரிலாய் பிறை சூடிய பிஞ்ஞகா
"காருலா ங்கண்ட னே"யுன் கழலடி
சேர்விலா ர்கட்குத் தீயவை தீயவே.

### திருமுறை 04 – திருநேரிசை

வழுவிலா துன்னை வாழ்த்தி வழிபடுந் தொண்ட னேனுன்
செழுமலர் பாதங் காணத் "தெண்டிரை நஞ்சம் உண்ட
குழகனே" கோல வில்லீ கூத்தனே மாத்தா யுள்ள
அழகனே ஆலவாயில் அப்பனே அருள்செ ய்வாயே.

### திருமுறை 04 – திருநேரிசை

காலனை வீழச் செற்ற கழலடி யிரண்டும் வந்தென்
மேலவா இருக்கப் பெற்றேன் மேதகத் தோன்று கின்ற
கோலநெய் த்தானம் என்னுங் குளிர்பொழிற் கோயில் மேய
"நீலம்வைத் தனைய தனைய கண்டம்" நினைக்கு மாநினைக்கின்றேனே.

### திருமுறை 04 – திருநேரிசை

மை"ஞ்ஞுவில் கண்டன் றன்னை" வலங்கையின் மழுவொன் றேந்தி
கைஞ்ஞுவின் மானினோடும் கனலெரி யாடி னானைப்
பிஞ்ஞுகன் றன்னை யந்தண் பெருவேளூர் பேணி னானைப்
பொய்ஞ்ஞெக நினைய மாட்டாப் பொறியிலா அறிவி லேனே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"ஓதமாக் கடலின் விடமு ண்டவன்"
பூத நாயகன் பொற் கயிலைக் கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாதம் ஏத்தப் பறையும் நம்பாவமே.

### திருமுறை 06 – திருக்குறுந்தொகை

"உண்டுந ஞ்சுகண்ட த்துளடக் கியங்கு
இண்டை செஞ்சடை வைத்த இயல்பினான்
கொண்ட கோவண ஆடையன் கூரெரி
அண்ட வாணர் அடையு மூரே.

### திருமுறை 06 – திருநேரிசை

மாலும் நான்மு கனும றிகிலார்
கால னாய அவனைக் கடந்திட்டுச்
சூலம் மான்மழு வேந்திய கையினர்
"ஆலம் உண்டு அழகாய ஆரூரரே"

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"அண்ட வாணர் அமுதுண நஞ்சுண்டு"
பண்டு நான்மறை ஓதிய பாடலன்
தொண்ட ராகித்தொ ழுதும திப்பவர்
புண்ட ரீகத் துளார் புகல் ஊரரே.

*சொ.பொ : புண்டரிகம் - (தாமரைமலர்) பணிகின் அடியார்களை "இதய + தாமரை" யில் இருப்பவர் கடவுள் (சிவன்).*

**திருமுறை 05 – திருக்குறுந்தொகை**

"அளித்த ஆனைஞ்சும் ஆடியவா னையார்"
வெளுத்த நீள்கொடி யேறுடை யானையார்
எதிர்த்த வேழத்தை எள்குவித் தானையார்
களித்த வானைக்கண் டீர்க டவூரரே.

*சொற். பொருள் : ஆனையார் - மகிழ்பவர், 02. யானையார் - ஆனையை உரித்து அதன் தோலினைப் போர்த்தியவர்.*

திருமுறை, திருக்குறுந்தொகை
"ஆலமுண் டழ காயதொ ரானையார்"
நீலமேனி நெடும் பளிங்கா னையார்
கோல மாயகொ முஞ்சுட ரானையார்
கால வானைக ண்டீர்க டவூரரே.

**திருமுறை 05 – திருக்குறுந்தொகை**

"அண்டவா னவர்கூ டிக்கடை ந்தநஞ்சு
உண்ட வானவனே"யுணர் வொன்றிலேன்
விண்ட வான்பொழில் வீழி மிழலை யுள்
கொண்ட னேயடி யேனைக் குறிக்கொளே.

## சிவனிரவு (பிரம்ம விட்டுணு) அடிமுடி தேடியமை "லிங்கோற்பவம்" பயின்று வரு திருமுறைப் பாடல்கள்

"தேடுவார் பிரமன் திருமா லவர்
ஆடு பாதம் அவரும் அறிகிலார்"
மாட வீதிவ லஞ்சுழி யீசனைத்
தேடு வானுறு கின்றதென் சிந்தையே.

**திருமுறை 06 – திருத்தாண்டகம்**

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி

"அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி"
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

**திருமுறை 05 – திருக்குறுந்தொகை**

"விண்ட மாமலர் மேலுறை வானொடும்
கொண்டல் வண்ணனுங் கூடி அறிகிலா
அண்ட வாணன்"தன் ஆரூர் அடிதொழ
பண்டை வல்வினை நில்லா பறையுமே.

**திருமுறை 05 – திருக்குறுந்தொகை**

"வஞ்ச நஞ்சில் பொலிகின்ற கண்டத்தர்"
விஞ்சை யின்செல்வப் பாவைவக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடார்
நஞ்ச நெஞ்சர்க்கு அருளுக நளாறரே.

சொ.பொ.வி : *விஞ்சை - வியத்தகு செயல்கள், செல்வப் பாவை - உமையவள், நஞ்ச + நெஞ்சர் - போலிப் + பக்தியினர்.*

**திருமுறை 05 – திருக்குறுந்தொகை**

"நீண்ட மாலொடு நான்முகன் தானுமாய்க்
காண்டும் என்புறுபுக் கார்கள் இருவரும்
மாண்ட ஆரழல் ஆகிய வானையார்
காட வானைகண் டீர்கட வூரரே."

**திருமுறை 06 – திருத்தாண்டகம்**

"கலங்க இருவர் கழலாய் நீண்ட
காரணமுங் கண்டேன்" கருவாய் நின்று
பலங்கள் தரித்துகந்த பண்புங் கண்டேன்
பாடல் ஒலியெலாங் கூடக் கண்டேன்
இலங்கைத் தலைவன் சிரங்கள் பத்தும்
இறுத்தவனுக் கீய்ந்த பெருமை கண்டேன்
வலங்கைத் தலத்துள் அனலுங் கண்டேன்
வாய்மூர் அடிகளை நான்கண் டவாறே.

சொ.பொ.வி : *அழலாய் - தீப்பிளம்பாய்*

### திருமுறை 04 – திருநேரிசை

"பானமர் ஏனமாகிப் பாரிடத்தி ட்டமாலும்
தேனமர்ந் தேறுமல்லித் திசைமுகமு டையகோவும்
தீனரைத் தியக்கறுத்த திருவுருவுடை யார்போலும்"
ஆனரையேற் றார்போலும் ஆவடுது றையனாரே.

*சொ.பொ.வி : ஆன் + நரை + ஏற்றர் - நரைத்த + இடப + ஏற்றார் + வாகன(ர்)த்தை உடையவர் சிவம்*

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

பாரிடங்கள் உடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை அயில்வாய் சூலம் ஏந்தி
நேரிடும்போர் மிக்கவல்ல நிமலன்தன்னை
நின்மலனை "அம்மலர்கொண் டயனும் மாலும்
பாரிடந்தும் மேலுயர்துங் காணாவ ண்ணம்
பரந்தானை" நிமிர்ந்துமுனி கணங்க ளேத்தும்
சீரெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தை
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.

*சொ.பொ.வி : பாரிடங்கள் - பூதங்கள்*

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழல் அறிவரியா னி"டம்
சென்று பாரிடம் ஏத்துபைஞ் ஞிலியுள்
என்று(ம்) மேவியி ருந்த அடிகளே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"திருவின் நாயகன் செம்மலர் மேலயன்
வெருவ நீண்ட விளங்கொளி ச்சோதியான்"
ஒருவனாய் உணர்வாய் உணர்வு அல்லதோர்
கருவுள் நாயகன் கச்சியே கம்பனே.

### திருமுறை 04 – திருநேரிசை

“குருந்தம தொசித்த மாலும் குலமலர்மேவி னானும்
திருந்துநல் திருவடியும் திருமுடியுங் காணமாட்டார்”
அருந்தவ முனிவர் ஏத்தும் திருவையா றமர்ந்த தேனைப்
பொருந்தநின் றுன்னுன்னு நெஞ்சே பொய்வினை மாயும் அன்றே.

### திருமுறை 04 – பண் - சாதாரி

தேடிக் கண்டு கொண்டேன் – திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொனாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

“செங்க னானனும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் கான்கிலர்”
இங்குற் றேனென்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

### திருமுறை 04 – திருநேரிசை

“அருவரை தாங்கி னானும் அருமறை ஆதி யானும்
இருவரும் அறியமாட்டா ஈசனார்” இலங்கை வேந்தன்
கருவரை எடுத்த ஞான்று கண்வழி குருதி சோரத்
திருவடி சிறிது வைத்தார் திருப்பு கலூர னாரே.

*பக்கம் ..... கூபாசுரங்கள் 2 உள்ளது.*

### காளி அம்பாள் நாமம் பயின்றுவரும் பாடல்கள்

வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
விற்பிடித்துக் கொம்புடைய ஏனதின் பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ள
கொலைப்பகழி உடன் கோத்துக் கோரப்பூசல்
“ஆடினார் பெருங்கூத்துக் காளி காண”
அருமறையோ டாறங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே.

*கூ தாண்டகத்தில் “வேடுவனாய சம்பவமும் பயின்றுளது”*
*சொ.பொ.வி : கோரப் + பூசல், கொடி + சண்டை.*

## திருமுறை 04 – திருநேரிசை

கூடினார் உமைதனோடே குறிப்புடை வேடங் கொண்டு
சூடினார் கங்கையானைக சுவறிடு சடையர் போலும்
பாடினார் சாம, வேதம் பைம்பொழிற் பழன மேயார்
"ஆடினார் காளி காண" ஆலங்காட் டடிக ளாரே.

## திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"கத்து காளி கதம், தணி வித்தவர்"
மத்தர் தாம் கடவூரின் மயானத்தார்
ஓத்து ஒவ்வா தனசெய்துழல் வாரொரு
பித்தர் காணும் பெருமான் அடிகளே.

## திருமுறை 04 – திருவிருத்தம்

"பைதற் பிணக்குழை காளிவெங்
கோபம்ப ங்கப்படுப்பான்
செய்தற் கரிய திருடநம்
செய்தன" சீர்மறையோர்
உய்தற் பொருட்டு வெங்கூற்றை
உதைத்தனன் உம்பர்கெல்லாம்
எய்தற் கரியன இன்னம்ப
ரான்றன் ணையடியே.

## திருமுறை 06 – திருத்தாண்டகம்

மாலாலும் அறிவரிய வரதர் போலும்
மறவாதார் பிறப்பறுக்க வல்லார் போலும்
நாலாய மறைக்கிறை யானார் போலும்
நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும்
"வேலார்கை வீரியைமுன் படைத்தார் போலும்
திருவீழி மிழலையமர் விகிர்தர் போலும்"
ஆலாலம் மிடற்றடக்கி அளித்தார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.

*சொ.பொருள். விளக்கம் : வேலார் + கை + விரி. பிரகாசிக்கின்ற + வேலாயுதங் + கைக்கொன்ட + காளியம்மை*

## அபிஷேகம் பயின்று வரும் பாசுரங்கள்

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
"ஆனைஞ்சும் ஆடியை"நான் அபயம் புக்க
தாளனைத் தன்னொப்பார் ரில்லா தானைச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாந்துந் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆளுங்கோவை
கேடிலியை நாடுமவர் கேடி லாதே.

*சொ.பத விளக்கம் : கீழ் - கௌபீனத்தை இணைத்து அரையிற் கட்டுந்துணிக்கொடி.*

### திருமுறை 04 – திருவிருத்தம்

தேன்திகழ் கொன்றையுங் கூவிளமாலை திருமுடி மேல்
"ஆன்திழ் ஐது(ம்)முகந்து ஆடும் பிரான்"மலை ஆர்த்தெடுத்த
கூன்திகழ் வாளரக் கன்முடி பத்துங்குலை ந்துவிழ
ஊன்றிய சேவடி யான்கட வூருறையு த்தமனே.

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

"நெய்யினொடு பாலிளநீர் ஆடினான் காண்"
நிந்தமண வாளனென நிற்கின்றான் காண்
கையின்மழு வாளொடுமா னேந்தினான் காண்
காலனுயிர் காலாற் கழிவித்தான் காண்
செய்யதிரு மேனிவெண் ணிற்றினான் காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தினான் காண்
வெய்யகனல் விளையாட்டு ஆடினான் காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே.

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

ஆளான அடியவர்கட் கன்பன் தன்னை
"ஆனைஞ்சும் ஆடியை"நான் அபயம்புக்க
தாளனைத் தன்னொப்பார் ரில்லா தானைச்
சந்தனமுங் குங்குமஞ் சாந்துந் தோய்ந்த

தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆளுங் கோவை
கேடிலியை நாடுமவர் கேடி லாரே.

*சொ.பத விளக்கம் : கீழ் - கௌபீனத்தை இணைத்து அரையிற் கட்டுந் துணிக்கொடி.*

**திருமுறை 04 – திருவிருத்தம்**

தேன்திகழ் கொன்றையுங் கூவிளமாலை திருமுடி மேல்
"ஆன்திழ் ஐது(ம்)முகந்து ஆடும் பிரான்மலை ஆர்த்தெடுத்த
கூன்திகழ் வாளரக் கன்முடி பத்துங்குலை நந்துவிழ
ஊன்றிய சேவடி யான்கட வூருறையு த்தமனே.

**திருமுறை 06 – திருத்தாண்டகம்**

"நெய்யினொடு பாலிளநீர் ஆடினான் காண்"
நித்தமண வாளனென நிற்கின்றான் காண்
கையின்மழு வாளொடுமா னேந்தினான் காண்
காலனுயிர் காலாற் கழிவித்தான் காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றினான் காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தினான் காண்
வெய்யகனல் விளையாட்டு ஆடினான் காண்
விண்ணிழி தண்வீழி மிழலை யானே.

**திருமுறை 06 – திருத்தாண்டகம்**

விண்ணோர் பெருமானை வீரட் டனை
வெண்ணீறு மெய்கணிந்த மேனியானை
பெண்ணானை ஆணானைப் பேடி யானைப்
பெரும்பற்றத் தண்புலியூர் பேணினானை
அண்ணா மலையானை "ஆனைந் தாடும்
அணியாரூர் வீற்றிருந்த அம்மான் தன்னைக்
கண்ணார் கடல்புடைசூழ் அந்தண் நாதைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காணலாமே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"பிரமன் மாலறி யாதபெ ருமையன்"
தரும மாகிய தத்துவன் எம்பிரான்
பரமனா ருறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"பூமே லானும் பூமகள் கேள்வனும்
தாமே தேவர் எனாமை நடுக்குற்றத்
தீமேவும் உருவா" திருவே கம்பா
ஆமோ அல்லற் படயடி யோங்களே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

வானம் சேர்மதி சூடிய மைந்தனை
நிநெஞ்சே சேகெடு வாய்நினைக்கிலை
"ஆனைஞ் சாடியை அன்பிலா ந்துறை
கோனெம் செல்வனைக்" கூறிட கிற்றியே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

அன்பின் "ஆனைஞ்சும் ஐந்துடன் ஆடிய"
என்பின் ஆனை யுரித்துக் களைந்தவன்
அன்பி லானை அம்ானை அள்ளாறிய
அன்பி னாரடிச் சேரவும் வல்லவனே.

*சொ. பொருள் : என்பி + ஆனை - எலும்பு நிறைந்த + ஆனை*

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

கானம் ஓடிக் கடிதெழு தூதுவர்
தானம் ஓடு தலைபிடியா முமை
"ஆனைஞ்சு ஆடி உகந்தவாட் போக்கியார்"
ஊன மில்லவர்கு உண்மையில் நிற்பரே.

### திருமுறை 04 – திருநேரிசை

"பாலுநெய் முதலா மிக்க பசுவின் ஐந்தா டுவோனே"
"மாலுநான் முகனுங் கூடிக்காண்கிலா வகையுள் நின்றாய்"
ஆலுநீர் கொண்ட ல்பூக அணிய ணாமலை யுளானே
வாலுடை விடையாயுன்தன் மலரடி மறப்பி லேனே.

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

பாகம் மாலை மகிழ்ந்தனர் பால்மதி
போக ஆனையின் ஈருரி போர்தவர்
கோல மாலைகுலா யதோர் கொன்றையும்
ஆக "ஆன்நெய் அஞ்சாடும் ஐயாறரரே"

### திருமுறை 05 – திருக்குறுந்தொகை

"ஆனின் ஐந்தும் ஆடுவார்" ஆரிருள்
கானிடை நடம் ஆடுவர் காண்மினோ
தேனிடை மலர் பாயுந்நெய் த்தானனை
வானிடைத் தொழு வார்வலி வாணரே.

### திருமுறை 06 – திருத்தாண்டகம்

"நெய்யாடி நின்மலனே" நீல கண்டா"
நிறை வுடையாய் மறைவ ல்லாய் நீதியானே
மையாடு கண்ம ட,வாள் பாக,த் தானே
மான்தோ லுடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்ட டியேன்றா னிட்டுக்கூ றிநின்று
பொய்யா சேவடிக்கே போது கின்றேன்
பூம்புக லூர்மே வியபு ண்ணியனே.

*க்ஷ பாடலில் பிரதோஷ காலமும் பயின்றுளது.*

# திருமுறை 07 – சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய பாடல்கள்
# கணபதி நாமம் பயின்று வரும் பாடல்கள்

### பண் : இந்தளம்

திங்கள் தங்குசடைக்கண் மேலோர் திரைகள் வந்து புரள வீச
கங்கை யாளேல் வாய்தி றவாள் "கணபதியேல் வயிறு தாரி"
"அங்கை வேலோன் குமரன் பிள்ளை" தேவியார் கொல் தட்டி யாளர்"
உங்ளுக்காட் செய்ய மாட்டோம் ஓண, காந்தன் தளியு ளீரே.

### பண் : கொல்லிக் கௌவாணம்

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
"மலையரையன் பொற்பாவை சிவனையுந் தேரேன்"
"எண்ணிலியுண் பெருவயிறன் கணபதியொ ன்றறியான்"
எம்பெருமான் இதுதகவோ இயம்பியருள் செய்யீர்
திண்ணெனவென் உடல்விருத்தி தாரீரே யாகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றே நாளைக்
கண்ணறையின் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல்நாகைக் காரோணம் மேவியி ருந்தீரே.

### பண் : காந்தாரம்

நமர்பிறர் என்பத றியேன் நான்கண்ட தேகண்டு வாழ்வேன்
தமரம் பெரிதுமுகப்பன் தக்கவா றொன்று மிலாதேன்
"குமரன் திருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும்
அமரன்" இருப்பது மாரூர்ரவர் அவர்ரெம்மை யுமாள்வாரோ கேளீர்.

### பண் : கொல்லிக் கௌவாணம்

"சேந்தர்தாய் மலைமங்கை" திருநிறமும் பரிவும்
உடையானை அதிகைமா நகருள் வாழ்பவனைக்
கூந்தல்தாழ் புனல்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையில் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மாமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி
ஏந்துநீர் எறிகெடில வடவீரட் டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன்போல் யானே.

சொ. ப. வி : சேந்தன் - முருகன் ; சடை + இடை - சடாபாரத்தின் + நடுவில் (கங்கை பாய்கிறது) அங்கங்கையில் ; கயலினங்கள் + குதிகொள்ள - கயல் மீன்கள் + துள்ளி, வணக்கி - முறித்து, ஏந்து + நீர் - வீசப்படுகின்ற + கடல்அலை.

**பண் : தக்கேசி**

வேந்தராய் உலகாண்டு அறம்புரிந்து
வீற்றிருந்தவ் உடலிது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயருள ந்திடுமிப் (மிப்)
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்தள் அங்கையில் ஆட்டுகந் தானைப்
பரமனைக் "கடற் சூர்த டிந்த
சேந்தர் தாதை"யைத் திருத்தினை நகருள்
சிவக்கொ முந்தினைச் சென்றடை மனமே.

**பண் : தக்கராகம்**

பெரும்பலம துடை"யசுரன் தாரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினை"முன் படைத்துகந்த புனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக் காமனுடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதுமூர் வினவில்
இரும்புனல்வெண் திரைபெருக ஏலமில வங்கம்
இருகரையும் பொருதலைக்கும் அரசிலின் தென்கரைமேல்
கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் னணே.

**பண் : தக்கேசி**

திங்கள் நம்பிமுடி மேலடி யார்கள்
சிறந்த நம்பிபிற ந்தஉயிர் க்கெல்லாம்
அங்கண் நம்பியருள் மால்விசு ம்பாளும்
அமரர் நம்பி"கு மரன்முத ல்தேவர்
தங்கள் நம்பி"தவத் துக்கொரு நம்பி
தாதை யென்றுன் சரண் பணிந்தேத்தும்
எங்கள் நம்பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் புமெங்கள் நம்பி கண்டாயே.

**பண் : நட்டராகம்**

"குளவனார் தம்மகள் தம்மக ணார்மண வாட்டி" கொல்லை
"மறவனா ராயங்கோர் பன்றிப்பின் போவது மாயங்கண்டீர்"
இறைவனார் ஆதியார் சோதியரா யங்கோர் சோர்வுபடா
அறவனாராவது அறிந்தோமே ல்நாம் இவர்குஆ ட்படோமே.

*க்ஷ பாடலில் வேட நாமமும் பயின்றுளது*
*சொ.பொ. வி : மறவனார் - வேடனார்.*

**பண் : தக்கேசி**

ஆத்தம் என்றெனை ஆளுகந் தானை
அமரர் நாதனைக் "குமரனைப் பயந்த"
வார்த்த யங்கிய முலைமட மானை
வைத்து வான்மிசை கங்கையை க்கரந்த
தீர்த்தனை னைச்சிவ னைச்செழுந் தேனைத்
தில்லையம் பலத்து ள்நிறைந் தாடும்
கூத்தனை குருமா மணித ன்னைக்
கோலக் காவினில் கண்டுகொ ண்டேனே.

*சொ.ப. வி : ஆத்தம் - தோழமை*

**பண் : தக்கேசி**

மறவனை அன்று பன்றிப்பின் சென்ற
மாயனை நால்வர்க்(கு) ஆலினிகீ ளுரைத்த
அறவனை அமர ர்கரி யானை
"அமரர் சேனைக்கு நாயக னான
குறவர் மங்கைதன் கேள்வினைப் பெற்ற"
கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவி ரியும்நள் ளாறனை அமுதை
நாயினே ன்மறந் தென்நி னைக்கேனே.

**பண் : தக்கேசி**

ஓட்டியா ட்கொண்டு ஓடியொளி த்திட்ட
உச்சிப்,போதனை நச்சர வார்த்த
பட்டி, யைப்பக லையிருள் தன்னை
பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்

கட்டியைக் கரும்பி ன்தெளி தன்னைக்
காதலாற் "கடற் சூர்த டிந்திட்ட
செட்டி யப்பனைப்" பட்டனை ச்செல்வ
ஆரூரானை மறக்கலும் ஆமெ.

## வீரபத்திரசுவாமி நாமம், செயல்கள் பயன்றுவரும் திருப்பாடல்கள்

**பண் : கௌசிகம்**

"உதையுங் கூற்றுக்கு ஒல்கா விதிக்கு
வதையும் செய்த மைந்தன்" இடமாம்
திதையும் தூதும் தேனும் ஞிமிறும்
துதையும் பொன்னிச் சோற்றுத் துறையே.

*சொ.பொ.வி : திதை - மகரந்தம், திதை - தேன்வண்டு ; பொன் வண்டு.*

**பண் : பஞ்சமம்**

பண்ணற் கரியதொரு படைஆழி தனைப்ப டைத்தும்
கண்ணற்கு அருள்புரிந்தான் "கருதாதவர் வேள்வியவி
உண்ணற் கிமயவரை உருண்டோட உதைத் துகந்து"
நண்ணற் கரியபிரான் நண்ணுமூர் நனிபள் ளியதே.

**பண் : நட்டராகம்**

படையார் வெண்மழுவா "பகலோன்பல் உகுத்தவனே"
விடையார் வேதியனேவி ளங்குங்குழை க்காதுடையாய்
கடையார் மாளிகைசூழ் கணநாதனெங் காளத்தியாய்
உடையாய் உன்னையல்லால் உகந்தேத்த மாட்டேனே.

**பண் : நட்டராகம்**

படைத்தாய் ஞலமெல்லாம் படர்புன்சடை எம்பரமா
"உடைத்தாய் வேழ்விதனை" உமையாளையோர் கூறுடையாய்
அடர்த்தாய் வல்லரக்கன் தலைபத்தொடு தோள்நெரிய
கடற்சாருங்களனிக் கழிப்பாலை மேயானே.

பண் : இந்தளம்

“பளிக்கும் பெருந்தக்கன் எச்சம் அழியப்
பகலோன் முதலாய் ப்பல தேவரையும்
தெழித்தி டவர்அங் கம்சிதை த்தருளும்
செய்கை என்னைகொலோ” மைகொள் செம்மிடற்றீர்
விழிக்கும் தழைப்பீலி யொருஏ லம்உந்தி
விளங்கு மணிமுத் தொடு பொன்வரன்றி
அழிக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்பு த்தூர் அழகரே.

பண் : தக்கேசி

வரங்கள் பெற்றுஉல் வாளரக் கர்தம்
வாலியு புரம் மூன்றெ ரித்தானை
நிரம்பிய “தக்கன் தன்பெரு வேள்வி
நிரந்தரஞ் செய்தநீல கண்ட கனைப்
பரந்த தொல்புக ளாளுமை நங்கை
பரவி ஏத்திவ ழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்ணடி யேன்பெற் றுவாறே.

*க்ஷ பாசுரத்தில் மு.பு. தகனமும் பயின்றுளது.*

பண் : கொல்லிக் கௌவாணம்

வென்றவன் வென்றவன் “வேள்வியில் விண்ணவர் தங்களைச்
செற்றவன் செற்றவன் சில்பலிக் கென்று தெருவிடை
நின்றவன்” நின்றவன் நீதிநி றைந்த வர்த ன்பால்
அன்றவன் அன்றவன் செய்யருள் ஆமத்தூர் ஐயனே.

*க்ஷ பாடலில் பிட்ஷாடன கோலமும் பயின்றுளது.*

பண் : பழம் பஞ்சுரம்

வேழம் உரிப்பர் மழுவார் “வேள்வி அழிப்பர் சிரம் அறுப்பர்”
ஆழி அளிப்பர் அரிதனக்கன்று ஆனைஞ்சுகப்பர் அறமுரைப்பர்
ஏழைத் தலைவர் கடவூரில் சிறுமான் மறிக் கையர்
பேழைச் சடையர் மயானத்துபெரிய பெருமா னடிகளே.

# வைரவசுவாமி நாமம், செயல்கள் பயின்று வரும் திருமுறைப் பாடல்கள்

**பண் : தக்கேசி**

“அன்றயன் சிரமரி ந்ததில் பலிகொண்டு
அமரருக் கருள்வெ ளிப்படுத்த
துன்று பைங்கழ லிற்சிலம் பார்த்த
சோதியைச்” சுடர்போ லொளி யானை
மின்த யங்கிய இடைமட மங்கை
மேவும் ஈசனை வாசமா முடிமேல்
கொன்றை அஞ்சடைக் குழகனை அழகார்
கோலக் காவினில் கண்டுகொ ண்டேனே.

**பண் : நட்டராகம்**

ஆர்த்தவர் ஆடரவம் அரைமேற் புலியீருரிவை
போர்தவர் ஆனையின் தோலுடல் வெம்புலால் கையகலப்
பார்த்தவர் “இன்னுயிர் பார்படைத் தான்சிரம் அஞ்சிலொன்றைச்
சேர்த்தவ”ருக் குறையு ம்மிடமா ம்திருநின்றி யூரே.

**பண் : தக்கேசி**

“ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து
நிறைக்க மாலுதி ரத்தினை யேற்றுத்
தோன்று தோள்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்த மாவிர தத்தக ங்காளன்”
சான்று காட்டுதற் கரியவன் எளியவன்
தன்னைத் தன்னிலா மனத்தா ர்க்கு
மான்று சென்றனை யாதவன் தன்னை
வலிவ லந்தனில் வந்து கண்டேனே.

# சந்திரசேகரர்(ர்) நாமம், செயல்கள் பயின்று வரும் தேவாரப் பாடல்கள்

பண் : பஞ்சமம்

குளிர்தரு “திங்கள், கங்கை குரவோடரக் கூவிளமும்
மிளிர்தரு புன், சடைமேல் உடையான்” விடையான் விரைசேர்
தளிர்தரு கோங்குவேங்கை தடமா தவிச ண்பகமும்
நளிர்தரு நன்றி லத்துப் பெருங்கோயில் நயந்தவனே.

பண் : தக்கராகம்

“தண்புனலும் வெண்மதியுந் தாங்கிய செஞ்ச டையன்”
“தாமரையோன் தலைகலனாக் காமரம்(ம்) முன் பாடி”
“உண்பலி கொண் டுழல்பரமன்” உறையு மூர்நி றைநீர்
ஒழுகுபுனல் அரிசிலின்தென் கலையநல் லூரதனை
நண்புடைய நன்சடைநன் இசை ஞானி சிறுவன்
நாவலர்கோ னாரூரன் நவின்ற விந்துரை செய்
பண்பயிலும் பத்துமிவை பக்திசெ ய்துபாட
வல்லவர்கள் அல்லலொடு பாவமிலர் தாமே.

# வேடநாமம் செயல்பயின்று வரும் பாசுரங்கள்

பண் : தக்கேசி

திருவின் நாயகன் ஆகிய மாலுக்கு
அருள்கள் செய்திடுந் தேவர் பிரானை
உருவி னானை ஒன் அறிவொ ண்ணா
மூர்த்தியை “விசைய ற்கருள் செய்வான்
“செரு”வில் லேந்தியோர் கேழற்பின் சென்று
செங்கண் வேடனாய்” என்னொடும் வந்து
மருவினா ன்தனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமறந் தென்நி னைக்கேனே.

### பண் : பஞ்சமம்

கார்பயில் வெஞ் சுரத்துக் "கடுங்கே ழற்பின் கானவனாய்
அமர்பயில் வெய்தி யருச்சு னற்கருள் செய்த பிரான்"
தார்பயில் தண்விழவில் தருசை வர்தவத் தின்மிக்க
நமர் பயில்ந ன்னிலத்து ப்பெருஞ் கோயில் அமர்ந்தவனே.

### பண் : நட்டராகம்

துன்று வார்சடைத் தூமதியானைத்
துயக்குறா வகை தோன்றுவி ப்பானைப்
பன்னு நான்மறை பாடவ ல்லானைப்
"பார்த்தனுக் கருள் செய்த பிரானை"
என்னை இன்னருள் எய்துவி ப்பானை
ஏதிலார் தமக்கே திலான் தன்னைப்
புன்னை மாதவி போதலர் நீடுர்ப்
புனிதனை ப்பணி யாவிட லாமே.

### பண் : பஞ்சமம்

தோடு காதிடு தூநெறி யானைத்
தோற்ற முந்துறப் பாயவன் தன்னைப்
பாடு மாமறை பாடவ ல்லானைப்
பைம்பொ ழிற்குயில் கூவிட மாடே
ஆடு மாமயில் அன்னமொ டாட
அலைபு னற்கழ னித்திரு நீடுர்
"வேட னாயபி ரானவன் தன்னை"
விரும்பி நாம்பணி யாவிட லாமே.

### பண் : தக்கராகம்

பாடார்த்த தனமாவும் பலாக்களுஞ் சாடி
நாடார வந்தெற்றியோ ர்பெண்ணை வடபால்
மாடார்த தனமா ளிகைசூழந் "துறையூர்
வேடா"உ னைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.

### பண் : தக்கேசி

போர்த்த நீள்செவி யாளரந் தணர்குப்
பொழில்கொள் "ஆல்கிழ் அறம் புரிந்து"
"பார்த்த னுக்கன்று பாசுபதங் கொடுத்(து)"
அருளினா ய்பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்திழி யும்புனல் கங்கை
நங்கை யாளைநின் சடைமிசை க்கரந்த
தீர்த தேநின் தன்திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

*ஃ பாடலில் தெட்ஷணா மூர்த்த செயல் பயின்றுளது.*

### பண் : பஞ்சமம் (பொது)

அங்கமோர் ஆறவை யும்அரு மாமறைவே ள்விகளும்
எங்கும் இருந்து அந்தணர்எரி மூன்றவைஓம் புமிடம்
பங்கய மாமுகத் தாளுமை பங்கன்உ றைகோயில்
செங்கயல் பாயும் வயல்திரு ஊர்நனிப ள்ளியதே.

### பண் : பஞ்சமம்

மல்கிய செஞ்சடை மேல்மதியும் அரவும் உடனே
புல்கிய ஆரணன் எம்புனிபு ரிநூல் விகிர்தன்
மெல்கிய வில்தொழி லான் விருப்பன் பெரும்" பார்தனுக்கு
நல்கிய நம்பெருமான்", நன்று மூர்நனி பள்ளியதே.

### பண் : தக்கேசி

மறவனை அன்றுப "ன்றிப்பி ன்சென்ற
மாயனை" நால்வர்க் காலின்கீ ளுரைத்த
அறவனை அமரர் க்கரியானை
"அமரர் சேனைக்கு நாயக னான
குறவர் மங்கைதன் கேழ்வனை ப்பெற்ற
கோனை" நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவி ரியும்நள் ளாறனை அமுதை
நாயினேன் மறந்தெ ன்நினை க்கேனே.

*ஃ பாசுரத்தில் கந்தநாமமும் பயின்றுளது*

**பண் : பழம் பஞ்சமம் (பிட்ஷாடனர்)**

கொத்தார் கொன்றை மதிசூடிக் கோணா நாகங்கள் பூணாக
மத்த யானை உரிபோர்த்து மருப்பும் ஆனைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடியா டப்பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே.

**பண் : பழம் பஞ்சமம்**

வாடா முலையாள் தன்னோடும் மகிழ்து "கானில் வேடுவனாய்
கோடார் கேழற் பின்சென்று குறுகிவிச யன் தவமழித்து
நாடா வண்ணம் செருச்செய்து ஆவநா ளிநி லைசெய்து
பீடார் சடையார்" மயானத்து பெரிய பெருமான் அடிகளே.

**பிட்ஷாடன(ர்) செயல்கள் பயின்று வரும் பாசுரங்கள்**

**பண் : கொல்லிக்கௌவாணம்**

முதுவா யோரி கதறுமுது காட்டு
எரிகொண் டாடல் முயல்வானே
மதூவார் கொன்றை புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
"கதுவாய்த் தலையில் பலிநீ கொள்ளக்
கண்டா லடியார் கவலாரோ"
அதுவோ ஆமாறு இதுவோ கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே

*சொ.பொ.வி : கது + வா + தலை - பிளந்து + வாயைத் + தலை (ஓடு)*

**பண் : கொல்லிக் கௌவாணம்**

கச்சேர் அரவொன் றரையி லசைத்துக்
சுழலு ஞ்சில புங்கலிக்கல் பலியென்று
துச்சம் போதா ஊர் திரியக்
கண்டா லடியார் உருகாரோ"
இச்சை யறியோம் எங்கள் பெருமான்
ஏழேழ்பி றப்புமெனை யாழ்வாய்
அச்ச மில்லாக் கச்சூர்வ டபால்
ஆலக் கோயில் அம்மானே.

### பண் : கொல்லிக்கௌவாணம்

"பத்தூர்புக் கிரந்துண் டுபலபதிக ம்பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிராடித் திரிவீர்"
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருகா லிரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவைர க்கோவை
அவைபூணத் தந்தருளி மெய்க்கனிதா நாறும்
கஸ்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.

*சொ.ப.வி : பத்தூர் + புக்கு + உன்டு - அயலிலுள்ள பத்து + உளர்களில் + போய் ; பல + பதிகம் + பாடி - அதிகமான + பாடல்களை + ஓதி. பலி + ஏற்று + திரிவீர். (மண்டையோட்டில்) பிச்சை (உணவு - இரப்பவர்) + சாப்பிட்டு + ஆனந்தமடைவீர், படிறு + ஆடி (பெண்களிடம்) வஞ்சனை + பேசி.*

### பண் : குறிஞ்சி

ஊனார் உடைவெண் தலையுண் பலிகொண்(டு)
ஆனார் அடலே றமர்வான் இடமாம்
வானார் மதியம் பதிவண் பொழில்வாய்
தேனார் நறையூர் ச்சித்தீ ச்சரமே.

### பண் : கொல்லி

குரவம்நாறிய "குழலினா ர்வளை கொள்வதே தொழிலா கிநீர்
இரவுமிம்மனை அறிதிரேயிங்கே நடந்துபோகவும் வல்லிரே"
பரவிநாடொறும் பாடுவார்வினை பற்றுறுக்கும் பைஞ்ஞீலியர்
அரவமாட்டவும் வல்லிரோ சொலும் ஆரணி யவிடங்கரே.

### பண் : குறிஞ்சி

கையொர் பாம்பரை ஆர்த்தொர்பாம்பு
கழுத்தொர் பாம்பவை பின்புதாழ
மெய்யெலாம் பொடிக் கொண் பூசுதிர்
வேதம் ஓதுதிர் கீதமும்

பையவே விடங்க ராகநின்று பைஞ்
ஞீலியெ ன்றீர் அடிகள்நீர்
"ஐயமே கும்மிது என்கொலோ சொலும்
ஆரணீய விடங் கரே".

**பண் : பழம் பஞ்சுரம்**

கொத்தா கொன்றை மதிசூடிக் கோள்நா கங்கள் பூணாக
மத்த யானைஉரிபோர்த்து மருப்பும் ஆமைத் தாலியார்
பத்தி செய்து "பாரிடங்கள் பாடியா டப்பலி கொள்ளும்
பித்தர்" கடவூர் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே.

**பண் : கொல்லி**

சிலைத்து நோக்கு ளேறுசெ ந்தழல்
வாய பாம்பது மூசெனும்
"பலிக்கு நீர்வரும் போதுநு ங்கையிற்
பாம்பு வேண்டா" பிரானீரே
மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமும்
மன்னு காரகில் சண்பகம்
அலைக்கும் பைம்புனல் சூழ்பைஞ் ஞீலியில்
ஆரணிய விடங் கரே.

**பண் : கொல்லி**

செந்தமிழ்த் திறன் வல்லிரோ "செங்கண்
அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்குமிது என்கொ லோபலி
மாற்ற மாட்டோம் இடுகிலோம்"
பைந்தண் மாமலர் உந்துசோ லைகள்
கந்தம் நாறுபைஞ் ஞீலியிர்
அந்தி வானமும் மேனியோ சொலும்
ஆரணீய விடங் கரே.

**பண் : பஞ்சமம்**

தண்ணியல் வெண்மையினான் "தலையிற் கடைதோ றும்பலி
பண்ணியன்" மென்மொழியார் இடங்கொ ண்டுழல் பாண்டரங்கன்
புண்ணிய நான்மறையோர் முறையாலடிபோ ற்றிசைப்ப
நண்ணிய நன்நிலத்துப் பெருங் கோயில மர்ந்தவனே.

பண் : இந்தளம்

வணங்கித் தொழுவார் அவர்மால் பிரமன்
மற்றும் வானவர் தானவர் முனிவர்
"உணங்கல் தலையில் பலிகொண்ட லென்னே
உலகங் களெலாம் உடையீர் உரையீர்"
இணங்கிக் கயல்சேல் இளவா ளைபாய
இணைக்கெண் டைதுள்ள க்கண்டிருந்த அன்னம்
அணங்கிக் குணங்கொள் அரிசில்தெ ன்கரை
அழகார் திருபுத் தூர்அ ழகனே.

*சொ.பொ.வி : உணகற் + தவீ - வற்றிய தலை (ஓடு) பிட்ஷ பாத்திரம்*

பண் : நட்ட இராகம்

"தலையிடை யார்பலி சென்றகந் தோறுந் திரிந்தசெல்வர்"
மலையுடை யாளொரு பாகம்வைத் தார் துதைந்தநன்னீர்
அலையுடை யார்சடை எட்டு சுழல அருநடஞ்செய்
நிலையுடை யாருறை யும்மிடம் மாம்திரு நின்றியூரே.

## தெட்ஷணாமூர்த்தி நாமம், செயல் பயின்று வரும் தேவாரங்கள்

பண் : நட்டராகம்

"அன்றாலின் நீழற்கீழ் அறம்நா ல்வர்களுள் புரிந்து"
கொன்றாய் காலனுயிர் கொடுத்தாய்மறை யோனுக்கு, மான்
கன்றா ருங்கரவா கடவூர்திரு வீரட்டானத்து
ஆராஎன் அமுதேயெனக் கார்துணை நீயலதே.

பண் : கொல்லிக்கௌவாணம்

முதுவா யோரிகத றுமுது காட்டு
எரிகொண் டாடல் முயல்வேனே
மதுவார் கொன்றைப்புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையில் பலிநிகொ ள்ள
அடியார் கவலா ரே
அதுவோ ஆமா றிதுவோ கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே.

பண் : கொல்லிக் கௌவாணம்

கச்சேர் அரவொன் றரையில் அசைத்துக்
சுழலும் சிலம்பும் கலிக்கல் "பலிக்கென்று
துச்சம் போத ஊரூர் திரியக்
கண்டா லடியா ருருகா ரோ"
இச்சை யறியோம் எங்கள் பெருமான்
ஏழேள் பிறப்பு மெனையா ழ்வாய்
அச்சம் இல்லாக் கச்சூர் வடபால்
ஆலக் கோயி லம்மானே.

## திரிபுரதகனம் பயின்றுவரும் பாடல்கள்

பண் : நட்டராகம் (நஞ்சுண்டமை)

முன்னவன் எங்கள், பிரான் முதல் காண்பரி தாயபிரான்
சென்னியில் எங்கள் பிரான் "திருநீல மிடற்றெ ம்பிரான்"
மன்னிய எங்கள்பிரான் "மறைநா ன்கெல்லா லநீழற்கீழ்
பன்னிய எங்கள் பிரான் பழமண் ணிப்படி க்கரையே.

பண் : பழம்பஞ்சுரம் (நஞ்சுண்டமை)

மறிநேர் ஒண்கண்ம டநல்லார்
வலையிற் பட்டும தியமங்கி
அறிவேய ழிந்தேன் ஐயாநான்
"மையார் கண்டம் உடையானே"
பறியா வினைக்ள அவைதீர்கும்
பரமா பழையனூர் மேய
அறிவே ஆலங்கா டானே
அடியார் கடியே னாவேனே.

பண் : நட்டராகம்

அற்றவ னாரடி யார்தமக் காயிழை பங்கினராம்
பற்றவ னாரெம் பராபர ரென்று பலர்விரும்பும்
கொற்றவ னார்குறு காதவர் ஊர்நெடு வெம்சுரத்தால்
செற்றவ னார்க்கிடம் ஆவது திருநீ ன்றியூரே.

**பண் : தக்கேசி (கூடி பாடல் : முருகநாமம் .....)**

திங்கள் நம்பிமுடி மேலடி யார்பால்
சிறந்த நம்பிபிற ந்தஉயிற் கெல்லாம்
அங்கண் நம்பியருள் மால்விசு ம்பாளும்
அமரர் நம்பிகும ரன்முதல் தேவர்கள்
தங்கள் நம்பிதவத் துக்கொரு நம்பி
தாதை" யென்றுன் சரண்பணி ந்தேத்தும்
எங்கள் நம்பி என்னையா ளுடைநம்பி
எழுபிப் புமெங்கள் நம்பிக ண்டாயே"

**பண் : தக்கேசி**

மெய்யை முற்றப்பொடி பூசியோர் நம்பி
வேதம்நா ன்கும்விரித் தோதியோர் நம்பி
கையில் வெண்மழு வேந்தியோர் நம்பி
கண்ணும் மூன்றுடையா யொருநம்பி
செய்ய நம்பிசிறு செஞ:சடைந ம்பி
திரிபுரம் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்த நம்பி யென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் புமெங்கள் நம்பி கண்டாயே.

**பண் : பழம்பஞ்சுரம்**

"எண்ணார் தங்கள் எயில்எய்த எந்தாய்" எந்தை பெருமானே
கண்ணாய் உலகங் காக் கின்றகருத்தா திருத்தாலாகாதாய்
பண்ணார் இசைகள் அவைகொண்டு பலரு மேத்தும் பழையனூர்
அண்ணா ஆலங் காடாவுன் அடியார்க்கடியே னாவேனே.

**பண் : பழம்பஞ்சுரம்**

வண்டார் குழலிஉ மைநங்கை பங்கா கங்கை மணவாளா
"விண்டார்புரங்கள் எரிசெய்த விடையாய்" வேத நெறியானே
பண்டாழ் வினைகள் பலதீர்க்கும் பரமா பழையனூர் மேய
அண்டா ஆலங் காடாவுன் அடியார்க்கடியே னாவேனே.

### பண் : கொல்லிக்கௌவாணம்

முடிப்பது கங்கையுந் திங்களும் “செற்றது மூவெயில்”
நொடிப்பது மாத்திரை நீறெழ க்கணை நூறினார்
கடிப்பது மேறுமென் றஞ்சுவன் திருக்கை களால்
பிடிப்பது பாம்பன்றி இல்லை யோஎம் பிரானுக்கே.

### பண் : நட்டராகம்

“கையார் வெஞ்சிலைநா ணதன்மேல் சரங்கோத்து
எய்தாய் மும்மதிலும் எரியுண்ண” எம்பெருமான்
செய்யார் பைங்கமலத் திருமேற்றளி உறையும்
ஐயா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே.

### பண் : நட்டராகம்

“சிலையால் முப்புரங்கள் பொடியாகச் சிதைத்தவனே”
மலைபோல் மாமருந்தே மடமாதிடங் கொண்டவனே
கலைசேர் கையினனே திருக்கற்குடி மேவிநின்ற
அலைசேர் செஞ்சடையாய் அடியேனையும் அஞ்ச லென்னாய்.

### பண் : இந்தளம்

தண்ணார்மதி சூடித்தழல் போலுந் திருமேனி
“எண்ணார்புரம் மூன்றுமமெரி உண்ண நகைசெய்தாய்”
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
அண்ணாயுனக் காளாயினி அல்லேன் எனலாமே.

### பண் : கொல்லிக்கௌவாணம்

“திருந்தாத வாளவுணர் புரம்மூன்றும் வேவச்
சிலைவளைவித் தொருகணையால் தொழில்பூண்ட சிவனைக்
கருந்தாத மதக்களிற்றின் உரியானைப் பெரிய
கண்மூன்றும் உடையானை கருதாத அரக்கன்
பெருந்தோள்கள் நாலைந்தும் மீரைந்து முடியும்
உடையானைப் பேயுருவ மூன்றுமுற மலைமேல்
இருந்தானை எறிகெடில வீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வனபோல் யானே.

# நஞ்சுண்டமை (பிரதோஷம்) பயின்றுவரும் தேவாரப் பாடல்கள்

**பண் : தக்கராகம்**

அஞ்சா தேயுனக்கு ஆட்செய வல்லேன்
யாதினுக்கு(ம்) ஆசைப் படுகேன்
பஞ்சேர் மெல்லடி மாமலை மங்கை
பங்கா எம்பர மேட்டி
மஞ்சேர் வெண்மதி சடை வைத்த
மணியே மாணிக்க வண்ணா
"நஞ்சேர் கண்டா", "வெண்டலை ஏந்தீ"
நாட்டியத் தான்குடி நம்பீ.

**பண் : தக்கேசி**

ஆலந் தானுகந்து அமுது செய்தானை
ஆதியைஅ மரர்தொழு தேத்தும்
சீலம் தான்பெரி தும்உடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தை யுளானை
ஏலவார் குழலா ளுமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

**பண் : தக்கேசி**

"கண்டமுங் கறுத் திட்ட பிரானைக்"
காணப் பேணும் அவர்க்கெ ளியானைத்
தொண்ட ரைப்பெரி தும்உகப் பானைப்
துன்பமுந் துறந்தி ன்பினி யானைப்
பண்டை வல்விளை கள்கெடு ப்பானை
பாக மாமதி யானவன் தன்னைக்
கெண்டை வாளை கிளர்புன ல்நீடூர்க்
கேண்மை யாற்பணி யாவிட லாமே.

### பண் : பழம்பஞ்சுரம்

"காரார் கடலின் நஞ்சுண்ட கண்டர்" கடவூர் உறைவாணர்
தேரார் அரக்கன் போய்வீழ்ந்து சிதைய விரலால் ஊன்றினார்
ஊர்தா னாவதுஉ லகேழும் உடையார்க் ஒற்றியூர் ஆரூர்
பேராயிரவர் மயா னத்து ப்பெரிய பெருமா னடிகளே.

### பண் : செந்துருத்தி

"காறார் கண்டத்" தெண்தோள் முக்கன் கலைகள் பலவாகி
ஆரூர் திருமூ லட்டா னத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரேப ழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே.

### பண் : இந்தளம்

குடமெடுத்து நீரும் பூவுங்
கொண்டுதொண்டர் ஏவல் செய்ய
நடமெடுத் தொன் றாடிப் பாடி
நல்குவீர் நீர்பு ல்கும்வ ண்ணம்
வடமெடுத்த கொங்கை மாதோர்
பாகமாக "வார்கடல் வாய்
விடமிடற்றி வைத்த தென்னே"
வேலை சூழ்வெங் காடனீரே.

### பண் : தக்கேசி

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளரா வுசுற்றிக் கடைந் தெழுந்த
"ஆலந ஞ்சுகண் டவர்"மிக இரிய
அமரர் கட்கருள் செய்வது கருதி
நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு
க்ணடத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும் பொழிற்திரு ப்புன்கூ ரூளானே.

### பண் : பழம் பஞ்சுரம்

சங்கலக்கும் தடல்கடல்வாய் "விடஞ்சு டவந் தமரர்தொழ
அங்கலக்கண் தீர்த்துவிடம் உண்டுகந் அம்மானை"
இங்கல க்கும் உடன்பிறந்த அறிவிலியேன் செறிவின்றி
எங்குலக்கப் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே.

### பண் : நட்டபாடை

சுடுவார்பொடி நீறும்நல துண்டப்பிறை க்கீளும்
"சுடர்மாமணி ஆனையுரி அணிந்த கறைக்கண்டன்"
படவேரிடை மடவாரொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச் சரத்தானே.

### பண் : நட்டராகம்

செய்யார் மேனியனே "திருநீலமி டற்றினனே"
மையார் கண்ணிபங்கா மதயானை உரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்கற்குடி மேவிநின்ற
ஐயா எம்பெருமான் அடியேனையும் அஞ்சலெனே.

### பண் : இந்தளம்

தோறம் உண்டேல் மரணம் உண்டு துயர(ம்)மனை வாழ்க்கை
மாற் முன்டேல் வஞ்சமுண்டு நெஞ்ச மனத்தீரே
நீற்றர் ஏற்றர் "நீலகண்டர் நிறைபு னல்நீழ் சடையர்
ஏற்றர் கோயில் எதிர்கொள்பாடி என்பத றிவோயே.

### பண் : நட்டராகம்

"மையார் கண்டத்தினாய் மதமாவுரி போர்த்தவனே"
பொய்யா தென்உயிருள் புகுகுத்தாயின்னம் போந்தறியாய்
கையார் ஆடரவா கடவூர்தனுள் வீரட்டத்தெம்
ஐயாவெ ன்னமுதே எனக்கார்துணை நீயலதே.

### பண் : கௌசிகம்

ஓதக் "கடல்நஞ்சினை உண்டி ட்ட
பேதைப் பெருமான்" பேணும் பதியாம்
சீதப்பு னலுண்டு எரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே.

# சிவன் ராத்திரி அடிமுடி தேடியமை "லிங்கோற்பவம்" பயின்று வரும் தேவாரங்கள்

**பண் : நட்டராகம்**

பிறையா ருஞ்சடையாய் "பிரமன் தலையிற் பலிகொள்
மறையார் வானவனே" மறையின்பொ ருளானவனே
"கறையாரும் மிடற்றாய்" கடவூர்தனுள் வீரட்டத்தெம்
இறைவா என்னமுதே எனக்கார்துணை நீயலதே.

**பண் : நட்டராகம்**

போராருங் கரியின்உரி போர்த்துப்பொன் மேனியின்மேல்
வாராரும் முலையாள் ஒருபாகம் மகிழ்ந்தவனே
"காராரும் மிடற்றாய்; கடவூர்தனுள் வீரட்டானத்(து)
ஆராஎன் அமுதேயெனக் கார்துணை நீயலதே.

*க்ஷ பாடல்களும் "பிரதோக்ஷகாலப்" பாடலுக்குரியவை.*

**பண் : நட்டராகம்**

"அயனோட ன்றறியும் அடிமுடி காண்பரிய
பயனே" யெம்பரனே பரமாய பரஞ்சுடரே
கயாமாரு ஞ்சடையாய் கடைவூர்திரு வீரட்டத்துள்
அயனேயெ ன்னமுதே எனக்கார்துணை நீயலதே.

**பண் : நட்டராகம்**

இந்திர னுக்கும் இராவணனுக்கும் அருள்புரிந்தார்
மந்திர மோதுவார் மாமறை பாடுவார் மான்மறியர்
"சிந்துரக் கண்ணனும் நான்முகனும் உடனாயத் தனியே
அந்தரம் செல்வது அறிந்தோமேல்" நாமிவர்க்கு ஆட்படோமே.

**பண் : நட்டராகம்**

"சங்கேந்து கையானுந் தாமரையின்
மேலானுந் தன்மை காணாக்
கங்கார்ந்த வார்சடைகள் உடையானை"
விடையானைக் கருப்பறிய லூர்க்

கொங்கார்ந்த பொழிற்சோலை சூழ்கனிகள்
பலவுதிர்க்குங் கொகுடிக் கோயில்
எங்கோனை மனத்தினால் நினைந்தபோது
அவர்நமக்கு இனிய வாறே.

பண் : பழம்பஞ்சுரம்

செப்பரிய "அயனொடுமால் சிந்தித்துந் தெரிவரிய
அப்பரிய திருவினையே அறியாதே அருவினையேன்
ஒப்பரிய குணத்தானை இணையிலியை அணைவின்றி
எப்பரிசு பிரிந்திருக்கேன் எண்ணாரூர் இறைவனையே.

பண் : நட்டராகம்

நெடியான் நான்முகனும் இரவியொ டிந்திரனும்
முடியால் வந்திறைஞ்ச முதுகுன்றம் அமர்தவனே
படியாரும் இயலாள் பாவையிவள் தன்முகப்பே
அடிகேள் தந்தருளீர் அடியேனிட ளங்கெடவே.

பண் : நட்டராகம்

நெறியே நின்மலனே "நெடுமாலயன் போற்றி செய்யும்
குறியே" நீர்மையனே கொடியேரிடை யான்தலைவா
மறிசேர் அங்கையனே மழபாடியுள் மாணிக்கமே
அறிவே நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

பண் : புறநீர்மை

"மண்ணினை உண்டுமிழ்ந்த மாயனும் மாமலர்மேல்
அண்ணலும் நண்ணரிய ஆதியை"மா தினொடும்
திண்ணிய மாமதில்சூழ் தென்திரு வாரூர்புக்கு
எண்ணிய கண்குளிர என்றுகொல் எய்துவதே.

பண் : சீகாமரம்

"மழையானும் நிகழ்கின்ற மலரோ"னென் றிருவர்கள்
உழையாநின் றவருள்கை உயர்வனத் துயர்வானைப்
பழையானைப் பனங்காட்டூர் பதியாகத் திகழ்கின்ற
குழைகாதற்(கு) அடிமைகட்குக் குழையாதார் குழைவென்னே.

பண் : தக்கராகம்

"மாவாய்ப் பிழந்தானும் மலர்மிசை யானும்
ஆவாஅ வர்தேடி த்திரிந்த லமர்ந்தார்"
பூவார்ந்தன பொய்கைகள் சூழுந்து றையூர்த்
தேவாவு னைவேண்டிக் கொள்வேன் தவநெறியே.

## காளி அம்பாள் பயின்றுவரும் திருமுறைகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 07ந் திருமுறையில் காணவில்லை"

## அபிடேகம் பியன்றுவரும் பாசுரங்கள்

பண் : நட்டராகம்

"அஞ்சுங்கொண் டாடுவர்" ஆவினிற்
சேவினைஆட் சிகொண்டார்
நஞ்சங்கொண் டாரடிச் சண்டியைத்
தாமெணவை த்துகந்தார்
நெஞ்சங்கொண் டார்வெணெய் நல்லூரில்
வைத்தெனையா ளுங்கொண்டு
நஞ்சங்கொண் டார்க்கிடம் ஆவது
நந்திரு நாவலூரே.

பண் : கொல்லிக்கௌவாணம்

அருமணியை முத்தினை "ஆன்அஞ்சாடும்"
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளை
திருமணியைத் தீங்கரும்பின் ஊறலிருந்தேனைத்
தெரியவரிய மாமணியைத் திகழ்தரு செம்பொன்னைக்
குருமணிகள் கொழித்திழிந்து கழித்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங் கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல்நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே.

**பண் : சீகாமரம்**

காவிரி புடைசூழ்சோ ணாட்டவர்
தாம் பரவிய கருணைய ங்கடல்
பாவிரி புலவர் பயிலுந்தி ருப்பனையூர்
மாவிரி மடநோக்கிஅ ஞ்ச
மதகரி உரிபோர்த் துகந்தவர்
"ஆவில் ஐந்துகப்பர்" அவரேஅ ழகியரே.

**பண் : சீகாமரம்**

நாறு செங்கழு நீர்ம லர்
நல்ல மல்லிகை சண்பகத் தொடு
சேறுசெய் கழனிப் பழனத் திருப் னையூர்
"நீறு பூசிநெய் யாடித் தம்மை
நினைப்பவர் தம்ம னத்த" ராகிநின்று
ஆறுசூ டவல்லார் அவரே அழகியரே.

**பண் : தக்கேசி**

"தேன்நெய் யாடிய கொன்றை யினானைத்"
தேவர் கைதொழுந் தேவர் பிரானை
ஊனம் ஆயின தீர்க்க வல்லானை
ஒற்றை ஏற்றனை நெற்றிக் கண்ணானைக்
காண ஆனையின் கொம்பி னைப்பிழிந்த
கள்ளப் பிள்ளைக்குங் காண்ப ரிதாய
வான நாடனை வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத் தைமற ந்துய் வனோ.

**பண் : பழம் பஞ்சுரம்**

வேழம் உரிப்பர் மழுவாளர் "வேள்வி அழிப்பர் சிரமறுப்பர்"
ஆழி அளிப்பர் அரிதனக்கன்று "ஆனைந்துக் உகப்பர்" அறமுரைப்பர்
ஏழைத் தலைவர் கடவூரில் இறவைர் சிறுமான் மறிகையர்
பேழைச் சடையர் மயானத்து(ப்) பெரிய பெருமா னடிகளே.

*கூஷ பாடலில் தக்கயாகம் வீரபத்திரர், தெட்ஷணாமூர்த்தி செயல்களும் பயின்று வருகின்றன.*

பண் : புறநீர்மை

மாவை உரித்து அதழ்கொண்டு அங்கம் அணிந்தவனை
வஞ்சர் மனத்திறையும் நெஞ்சணு காதவனை
மூவர் உருத்தனதாம் மூல முதற்குருவை
மூசிடு மால்விடையின் பாகனை ஆகமுறப்
பாவகம் இன்றிமெய்யே பற்றவர் கழுதை
"பால்நறு நெய்தயிரைந்(து) ஆடுப ரம்பரனைக்"
காவல் எனக்கிறையென் எய்துவதெ ன்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேரூருறை களையையே.

பண் : நட்டராகம்

வஞ்சங் கொண்டான்மனம் சேரகி லார்நறு "நெய்தயிர்பால்
அஞ்சுங் கொண்டாடிய வேட்கையி"னாலதிகைப் பதியே
தஞ்சங் கொண்டார்தமக் என்று மிருக்கை சரணடைந்தார்
நெஞ்சங் கொண்டார் கிடமாவது நந்திரு நின்றியூரே.

பண் : பஞ்சமம்

வானுடை யான்பெரி யான்மனத் தாலும் நினைப்பரியான்
"ஆனிடை ஐந்தமர்ந் தா"ணணு ஆகியோர் தீயுருக்கொண்(டு)
ஊனுடை இவ்வுடல ம்மொடுங்கிப் புகுந்தான் பந்தான்
நாடுடை நம்பெருமான் நண்ணும் ஊர் நனிபள்ளியதே.

பண் : பழம்பஞ்சுரம்

வேலங்காடு தடங்கண்ணார் வலையிற்பட்டுன் நெறிமறந்து
மாலங்காடி மறந்தொழிந்தேன் மணியேமுத்தே மரகதமே
"பால்ஙகாடி நெய்யாடி" படர்புன்சடையாய் பழையனூர்
ஆலங்காடா உன்னுடைய அடியார்கடி யேனாவேனே.



றூபன் பிறிண்டேர்ஸ், ஆனைக்கோட்டை.யாழ். 021 225 5566